விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 210 வள்ளுவர் ஆண்டு 2056 ஆடி 01 வியாழக்கிழமை (17.07.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

வவுனியா வடக்கு வெடிவச்சகல்லு கிராம அலுவலகர் பிரிவில்

## ஆயிரம் ஏக்கர் காணி தமிழ் அரச அதிகாரிகளின் துணையுடன் பெரும்பான்மையினர் ஆக்கிரமிக்க முயற்சி

(வவுனியா)

வவுனியா வடக்கு வெடிவச்சகல்லு கிராம அலுவலர் பிரிவில் தமிழ் மக்களின் ஆயிரம் ஏக்கர் பூர்வீகக் காணிகள் தமிழ் அரச அதிகாரிகளின் துணையுடன் பெரும்பான்மை இனத்தவர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்பு முயற்சி தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது, தமிழர் பகுதியில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆயிரம் ஏக்கர் அடர் வன அழிப்பு முயற்சி பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரனது நேரடித் தலையீட்டினால் கடந்த 7ஆம் திகதி தடுத்து நிறுத்தப்பட்டது.

மேலும் இது குறித்து உரிய 02ஆம் பக்கம் பார்க்க

செம்மணி புதைகுழி விவகாரம்

## நீதியான விசாரணை முன்னெடுக்கப்படும்

பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டவல

(கொழும்பு)



செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் தொடர்பில் நீதியான விசாரணை முன்னெடுக்கப்படும் என பொதுமக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டவல தெரிவித்துள்ளார். (02ஆம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாண மாவட்ட

## ஒருங்கிணைப்பு கூட்டம் இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று வியாழக்கிழமை மு.ப 9.00 மணிக்கு மாவட்டச் செயலக கேட்போர் 15ஆம் பக்கம் பார்க்க

## ரயில் மோதியதில் குடும்பஸ்தர் மரணம்

யாழ். ஏ9 வீதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

புகையிரதம் மோதியதில் படுகாயம் அடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

இதில் பூதராயர் சிவன் 15ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.மாநகர சபை அமர்வை முகநூல் ஊடாக நேரலை

சபை உறுப்பினருக்கு முதல்வர் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை அமர்வை முகநூல் ஊடாக நேரலையில் ஒளிபரப்பிய மாநகர சபை உறுப்பினருக்கு மாநகர முதல்வரால் கடும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

யாழ்மாநகர சபையின்ஜூலை மாத அமர்வு மாநகர முதல் 15ஆம் பக்கம் பார்க்க

## கிளிநொச்சியில் அதிகளவான காணிகள் தொடர்ந்தும் படையினரின் ஆக்கிரமிப்பில்

விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு சிறீதரன் எம்.பி கோரிக்கை



(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகரில் நாற்பது வீதத்திற்கும் அதிகமான காணிகளை படையினர் தொடர்ந்தும் ஆக்கிரமித்து வைத்திருக்கின்றனர். இவற்றை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாராளுமன்ற 15ஆம் பக்கம் பார்க்க

## கழுத்தில் கத்திவைத்து மிரட்டி நகை கொள்ளை

துரத்திப் பிடித்த முள்ளியவளை மக்கள்

(முல்லைத்தீவு)

மோட்டார் சைக்கிளில் வீதியால் சென்ற பெண்ணை வழிமறித்து தங்கச் சங்கிலியை பறிமுதல் செய்த கொள்ளையர்கள் இருவர் ஊர்மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் முல்லைத்தீவு முள்ளியவளையில் இடம்பெற்றுள்ளது. 15ஆம் பக்கம் பார்க்க

## அநுர அரசால் மக்கள் நெருக்கடிக்குள்

நாமல் குற்றச்சாட்டு

(கொழும்பு)

அநுர அரசாங்கத்தின் நடவடிக்கையால் பொதுமக்கள் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளனர் எனப் பாராளு 02ஆம் பக்கம் பார்க்க

## வடக்கில் இராணுவ வசமுள்ள காணிகளை விடுவிக்குக

எதிர்வரும் 30ஆம் திகதி யாழில் கவனயீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் இராணுவத்தினர் வசமுள்ள பொது மக்களின் காணிகளை விடுவிக்கக்கோரி எதிர்வரும் 30 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முன்னதாக வடக்கில் இராணுவத்தினரால் ஆக்கி 15ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அநுர அரசால் ...

மன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ குற்றம் சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்றுப் புதன்கிழமை (16) நடைபெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

நடுத்தர மக்களை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் இந்த அரசாங்கம் செயற்படுகிறது. ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் நடுத்தர மக்களை பாதுகாப்பதாகக் குறிப்பிட்டார்கள். ஆனால் இன்று நடுத்தர மக்களின் தொழில் நடவடிக்கைகளை முற்றாக இல்லாதொழிக்கும் வகையில் அரசாங்கம் செயற்படுகிறது.

ஜனாதிபதியின் பொதுமன்னிப்பு விவகாரம் மற்றும் கொள்கலன் விடுவிப்பு விவகாரத்தில் அரசாங்கத்தின் முறைகேடான செயற்பாடு அரச அதிகாரிகள் மீது சுமத்தப்பட்டுள்ளது. அரச சேவையாளர்கள் அரசாங்கத்துக்கு எதிராக வெகுவிரைவில் குரல் எழுப்புவார்கள்.

அரச சேவையை வினைத்திறனாக்குவதாக குறிப்பிட்டுக் கொண்டு அச்சேவையை அரசியல்மயப்படுத்தும் வகையில் அரசாங்கம் செயற்படுகிறது. அரசாங்கத்தின் செயற்பாடுகளை மக்கள் வெகுவிரைவில் விளங்கிக் கொள்வார்கள்.

தேசிய மக்கள் சக்தியின் அரசியல் செயற்பாட்டாளர்களாக செயற்பட்ட சானி அபேசேகர மற்றும் ரவி செனவிரத்ன ஆகியோரின் நியமனம் தொடர்பில் அமைச்சர் பிமல் ரத்நாயக்க குறிப்பிட்ட விடயம் பாரதூரமானது. இவ்விருவரும் மக்கள் விடுதலை முன்னணியின் ஊடக சந்திப்புக்களை நடத்தினார்கள்.

அமைச்சர் பிமல் ரத்நாயக்க குறிப்பிட்ட விடயத்தின் உண்மையை கத்தோலிக்க சபை வெளிப்படுத்த வேண்டும். உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள் சிறந்த முறையில் முன்னெடுக்கப்படுவதாக அரசாங்கம் குறிப்பிடுவது வரவேற்கத்தக்கது. தேர்தல் காலத்தில் தேசிய மக்கள் சக்தி குறிப்பிட்ட பொய்களுக்கு முடிவு அப்போது தான் கிடைக்கும் என்றார். (ம-7)

## ஆயிரம் ...

சட்ட நடவடிக்கை எடுப்பதாகவும் சம்பந்தப்பட்டவர்கள் நிச்சயம் தண்டிக்கப்படுவர் எனவும் வனவளத்துதுறை மகாவலி அதிகார சபை என்பன உறுதியளித்திருந்தன.

இந்நிலையில் நேற்று பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் தலைமையிலான குழுவினர் மகாவலி அதிகார சபையினர் மேற்கெண்ட நடவடிக்கைகள் குறித்து வினவியிருந்தனர். இதன்போதே தமிழர்களுக்கு தமிழ் அரச அதிகாரிகளே வினையாய் அமைந்த சம்பவம் வெளிக்கொணரப்பட்டுள்ளது.

மகவாலி அதிகார சபையால் திரிவைச்சகுளம் பகுதியில் தமிழ் மககள் பூர்வீகக் காணியை கடந்த 2022ஆம் ஆண்டு 10 பெரும்பான்மை இனத்தவர்களுக்கு விவசாய நடவடிக்கைகளுக்கு ஓராண்டு குத்தகைக்கு வழங்கியுள்ளது.

இதனைப் பெரும்பான்மை இனத்தவர்கள் அந்தர்வெல கமக்கார அமைப்பாக பதிவு செய்துள்ளனர்.

குறித்த பகுதியை நெடுங்கேணி கமநல சேவை நிலையம் அளவீடுகளை மேற்கொண்டு குறித்த பெரும்பான்மை இனத்தவரின் கமக்கார அமைப்பை அங்கீகரித்துள்ளது.

குறித்த பகுதிக்கான கிராம உத்தியோகத்தர் வவுனியா வடக்குப் பிரதேச செயலகம் என்பன குறித்த செயற்பாட்டுக்கு துணைபோயுள்ளமையும் வெளிக் கொணரப்பட்டுள்ளது.

ரவிகரன் எம்.பியின் நேற்றைய களவிஜயத்தின் போது வனவளத் திணைக்களம் 1000 ஏக்கர் காடழிப்பிற்கு குறித்த பெரும்பான்மையினரே காரணம் எனப் பெயரிட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ள நிலையில் இதற்குப் பிரதான காரணமாக அரச அதிகாரிகளின் அசமந்த போக்கே அடித்தளமிட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. (ம-7)

## நீதியான ...

ஊடகம் ஒன்றிற்கு அவர் நேற்று வழங்கிய நேர்காணலிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

செம்மணி தொடர்பில் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும், அரசு அந்த நடவடிக்கைகளில் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாகவும் தெரிவித்தார்.

மேலும், மேற்படி விவகாரங்கள் தொடர்பில் எம்மிடம் உள்ள தகவல்களை நாம் வெளியிடமாட்டோம்.

அவற்றை வெளியிட்டால் அதைப் பெற்றுக்கொள்வோர் அதனை எவ்வாறான செயற்பாடுகளுக்குப் பயன்படுத்துவார்கள் எனத் தெரியாது.

இந்த விடயங்களில் எவரது அவசரத்துக்கும் ஏற்ப எம்மால் செயற்பட முடியாது.

கடந்த அரசு அவ்வாறு செயற்பட்டாலும் எமது அரசு ஒரு போதும் அவ்வாறு செயற்படாது. அரசு என்ற வகையில் நாம் மிகவும் பொறுப்புடன் செயற்படுவோம் எனத் தெரிவித்தார். (ம-7)

## மரண அறிவித்தல்

பிறப்பு 01 - 01 - 1959



இறப்பு 16 - 07 - 2025

### நித்தியானந்தம் செல்வராணி

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நித்தியானந்தம் செல்வராணி அவர்கள் நேற்று 16.07.2025 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினம் - நாகமுத்து தம்பதியரின் அன்புப்புதல்வியும் மாரிமுத்து - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் அமரர் நித்தியானந்தம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற செல்வானந்தி மற்றும் நிமலானந்தி, தர்சானந்தி ஆகியோரின் பாசமிகு தாயாரும் குமாரி தீபாவின் பெரியதாயாரும் கலாவதி மற்றும் காலஞ்சென்ற தவமணி ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற பவானந்தம் மற்றும் மனோகரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் உதயகுமார், வையெந்திமாலா, பிறேம்குமார், வசந்தகுமார், ராஜ்குமார், ரஜினகுமார், ரலித்குமார் மற்றும் புஸ்பகரன் ஆகியோரின் அன்பு மாமியும் புருசோத்தமன், புவியரசி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 17.07.2025 வியாழக்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*தகவல்:*
குடும்பத்தினர்

(4827)

## இராசிபலன்

17.07.2025
ஆடி 01, வியாழக்கிழமை
சப்தமி முன்னிரவு 6.39மணிவரை

ரேவதி பின்னிரவு 03.35 மணிவரை
சுபநேரம் 7.30 - 9.00 மணிவரை
இராகுகாலம் 1.30 - 3.00 மணிவரை
சித்தாமிர்தம், ஆடிப்பிறப்பு

சந்திராஷ்டமம்-
உத்தரம்

வளவன்

**மேஷம்** — தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், கொடுக்கல்-வாங்கல்களில் கவனம் தேவை, சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும்.

**கடகம்** — ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், உடல் நலன் சீராகும்.

**துலாம்** — வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், மறைமுக எதிர்ப்புக்கள் மாறும், செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், பொது வாழ்வில் புகழ் கூடும்.

**மகரம்** — அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், வழிபாடு சிறப்பினைத் தரும், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.

**ரிஷபம்** — வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் செய்திகள் வந்து சேரலாம், வழிபாட்டில் ஆர்வம் கூடும்.

**சிம்மம்** — சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, காரிய வெற்றிக்கு இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், கௌரவக் குறைவான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**விருச்சிகம்** — தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வீட்டுத்தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும்.

**கும்பம்** — ஆரோக்கியத்தில் கவனம் தேவை, விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, பணவரவு திருப்தி தரும் வகையில் அமையும்.

**மிதுனம்** — எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு.

**கன்னி** — விரும்பிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பொறுமையால் பெருமைகள் வந்து சேரும் நாள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**தனுசு** — திட்டமிட்ட காரியங்களைச் செய்து முடிப்பீர்கள், வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள், தொழில் வளர்ச்சிக்கு முட்டுக் கட்டையாக இருந்தவர்கள் மனம் மாறுவர்.

**மீனம்** — திடீர் பயணத்தால் திசை திருப்பங்கள் ஏற்படலாம், நிதானத்துடன் நடந்து கொள்ள வேண்டிய நாள், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு.

**கடல் போல் செலவழி ஆனால் எள் முனையளவு கூட வீணாக்காதே.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிராமப்புற பாடசாலைகளில்

# குறைந்தளவு மாணவர்கள் அதிகளவான ஆசிரியர்கள்

### தரவுகளை சமர்ப்பிக்குமாறு கல்வி அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

**குறைந்த எண்ணிக்கையிலான மாணவர்கள் கல்வி கற்கும் கிராமப்புற பாடசாலைகளில் அதிகளவிலான ஆசிரியர்கள் இருப்பதாக தகவல்கள் கிடைத்துள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.**



எனினும் சில பாடசாலைகளில் ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவுவதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

பாடசாலைகளில் உள்ள மேலதிக ஆசிரியர்களின் எண்ணிக்கை தொடர்பான தரவுகளை உடனடியாக சமர்ப்பிக்குமாறு கல்வி மற்றும் உயர்கல்வி பிரதி அமைச்சர் மதுர செனவிரத்ன அறிவித்தல் விடுத்துள்ளார்.

அதன்படி மாகாண மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு இந்த அறிவித்தலை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த ஏற்றத்தாழ்வு நாடு முழுவதும் ஆசிரியர் பங்கீட்டை கணிசமாக பாதித்து வருவதாகவும் 2026 ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்படும் புதிய கல்வி சீர்திருத்தங்களுக்கு ஏற்ப நாடளாவிய ரீதியிலுள்ள ஆசிரியர்களை மறுபகிர்வு செய்ய அமைச்சு நடவடிக்கை மேற்கொள்ளும் என மதுர செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

இதேவேளை புதிய கல்வி சீர் திருத்தங்களின் கீழ், க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு 7 பாடங்கள் மட்டுமே மதிப்பீடு செய்யப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

## அன்ரன் பாலசிங்கத்திற்கு பிரான்ஸில் சிலை



(பாரீஸ்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகராகவும் கொள்கை வகுப்பாளராகவும் தத்துவாசிரியராகவும் இறுதிவரை செயற்பட்ட மறைந்த அன்ரன் பாலசிங்கத்துக்கு பிரான்ஸின் தலைநகரான பாரீஸில் நினைவுச் சிலை அமைக்கப்படவுள்ளது.

அன்ரன் பாலசிங்கத்தின் நினைவு சிலையை நிறு வும் பணியை பிரான்ஸ் தமிழ் பண்பாட்டு வலயம் கார்த்திகை 27 சங்கம் ஆகிய அமைப்புகள் முன் னெடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பாரீஸின் புறநகரான மொண்டி பூங்காவில் அன்ரன் பால சிங்கத்தின் சிலையை நிறுவுவதற்கு அனுமதியை மொண்டி நகரசபை வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதற் கான அடிக்கல் கடந்த 12 ஆம் திகதி பாரிஸ் புறநகர் பகுதியான மொண்டியில் நாட்டப்பட்டது.

மொண்டி நகர முதல்வர் ஸ்ரீபன் அர்வில் மற்றும் நகர சபை உறுப்பினர்கள் அன்ரன் பாலசிங்கத்தின் சிலைக்கான அடிக்கல்லை நாட்டி வைத்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி)

## காணாமல் ஆக்கப்பட்ட அனைவருக்கும் நீதி வழங்கு!

### மன்னார் கையெழுத்துப் போராட்டம்



(மன்னார்)

சம உரிமைகளை வெல்வோம் இனவாதத்தை முடிவுக்கு கொண்டு வருவோம் எனும் தொனிப்பொருளில் சம உரிமை இயக்கம் ஏற்பாடு செய்த எதிர்ப்பு பதாகையில் கையொப்பமிடும் நிகழ்வு நேற்றுப் புதன்கிழமை காலை 10.30 மணியளவில் மன்னார் பஜார் பகுதியில் இடம்பெற்றது.

இதன் போது காணாமல் ஆக்கப்பட்ட அனைவருக்கும் நீதி வழங்கு, இன்னொரு அடக்குமுறைச் சட்டங்கள் வேண்டாம், பயங்கரவாத தடைச்சட்டத்தை உடனடியாக ரத்து செய், அனைத்து தேசிய இனங்களுக்கும் சம உரிமைகளை உறுதி செய்யும் அரசியல் அமைப்பிற்காக போராடுவோம் உள்ளிட்ட கோரிக்கைகளை முன் வைத்து எதிர்ப்பு பதாகையில் கையொப்பம் சேகரிக்கப்பட்டது. இதன் போது பொதுமக்கள்,சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்டு ஆதரவு தெரிவித்து கையொப்பத்தை பதிவு செய்தனர். (8-285)

## நிதி நெருக்கடி காரணமாக

# கருவுறுதலை ஒத்திவைக்கும் இளம் தலைமுறையினர்

### கொழும்பு பல்கலையின் முன்னாள் துணைவேந்தர்

(கொழும்பு)

இளம் தலைமுறையினர் குழந்தை பெறுவதை ஒத்தி வைப்பதால், இலங்கையில் பிறப்பு வீதம் கடுமையாகச் சரிந்து வருவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியத்தின், 2025 உலக சனத்தொகை அறிக்கையை வெளியிடும் நிகழ்வில் கலந்து கொண்டு கொழும்பு பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் லக்ஷ்மன் திசாநாயக்க இதனைத் தெரிவித்தார்.

இளம் தம்பதிகள் அதிக குழந்தைகளைப் பெற விரும்பினாலும் நிதி உறுதியற்ற தன்மை, தொழில் பாதுகாப்பின்மை மற்றும் அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவுகள் அவர்களை ஊக்கப்படுத்துவதில்லை.

இது நாட்டை ஒரு “கருவுறாமை பொறிக்குள்” தள்ளுகிறது என்று அவர் குறிப்பிட்டார்.

தொகை மதிப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்களத்தின் தரவுகளுக்கமைய தற்போது சனத்தொகை வளர்ச்சி வீதம் மிகக் குறைவாக உள்ளது. 1871 ஆம் ஆண்டு முதல் எப்போதும் இல்லாத அளவுக்கு, சனத்தொகை வளர்ச்சி வீதம் 0.5 சதவீதத்தை எட்டியுள்ளது.

அத்துடன் ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியத்தின் தரவுகளின்படி தேசிய கருவுறுதல் வீதம் தற்போது ஒரு பெண்ணுக்கு 1.9 குழந்தை என்ற விகிதத்தில் முந்தைய நிலைக்கும் குறைவாக உள்ளது.

கருவுறுதல் சரிவு என்பது தனிப்பட்ட ஆசைகளால் ஏற்பட்டதல்லவெனவும் மாறாக அமைப்புகள் தோல்வியடைந்ததால் ஏற்பட்ட நிதி நெருக்கடி காரணமாக திருமணங்கள் தாமதமானதால் ஏற்பட்டுள்ளதாகவும் பேராசிரியர் லக்ஷமன் திசாநாயக்க சுட்டிக் காட்டியுள்ளார். (நி)

# வெகுவிரைவில் பலர் கைது செய்யப்படுவர் அமைச்சர் நளிந்த சுட்டிக்காட்டு



(கொழும்பு)

குண்டுத்தாக்குதல் தொடர்பில் இதுவரை காலமும் வெளியாகாத பல விடயங்கள் தற்போது வெளிவந்துள்ள நிலையில் தேசிய மற்றும் சர்வதேசமட்டத்தில் பலர் வெகு விரைவில் கைது செய்யப்படுவார்கள் என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் இதனை குறிப்பிட்டார்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் விவகாரம் மற்றும் ஏனைய குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கு இராஜதந்திர மட்டத்தில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

குண்டுத்தாக்குதல் தொடர்பில் இதுவரை காலமும் வெளியாகாத பல விடயங்கள் தற்போதைய விசாரணைகளின் ஊடாக வெளிவந்துள்ளன. அவற்றில் ஒரு பகுதியையே பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அண்மையில் பாராளுமன்றத்தில் குறிப்பிட்டார்.

குண்டுத்தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள் நிறைவடையவில்லை. விசாரணைகள் நிறைவுபடுத்தப்பட்டு வெகுவிரைவில் நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என அவர் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## புத்தூர் வீனஸ் கழகம் நடத்தும் மாபெரும் உதைப்பந்தாட்ட சமர்



இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளனத்தின் அனுசரணையுடன் புத்தூர் வீனஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ். மாவட்ட ரீதியிலான அணிக்கு 11 பேர் கொண்ட மாபெரும் உதைப் பந்தாட்டச் சமர் நேற்று முன்தினம் புத்தூர் வீனஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆரம்பமாகியது.

யாழ். மாவட்டத்தின் 48 முன்னணி விளையாட்டுக் கழகங்கள் பங்குகொள்ளும் இப்போட்டிகளின் முதல்நாள் ஆட்டத்தில் "பி" பிரிவில் கொலின்ஸ் விளையாட்டு கழகத்தை எதிர்த்து எவறெஸ்ற் விளையாட்டுக் கழகம் மோதியது.

விறுவிறுப்பாக இடம்பெற்ற போட்டியில் இரண்டு அணிகளும் தலா ஒரு கோல்களை போட்டு சமநிலையில் இருந்தன. எனினும் இரண்டாம் பாதி ஆட்டத்தில் மேலும் 4 கோல்களை போட்டு 5:2 என்கின்ற கோல் கணக்கில் எவரெஸ்ட் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது.தொடர்ந்து நடைபெற்ற "ஏ" பிரிவிற்கான போட்டியில் சென். றோக்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் மோதி யது. விறுவிறுப்பான ஆட்ட முடிவில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகம் 2:1 என்ற கோல் அடிப்படையில் வெற்றி பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. (3-104)



மாகாண மட்ட பாடசாலைகளுக்கிடையிலான சதுரங்க சுற்றுப் போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் 17 வயதிற்குட்பட்டோருக்கான சதுரங்க அணியினர் சம்பியனைக் கைப்பற்றினர்.



மாகாண மட்ட பாடசாலைகளுக்கிடையிலான டென்னிஸ் போட்டியில் யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியின் 17 வயதுக்குட்பட்டோருக்கான டென்னிஸ் அணியினர் சம்பியனைக் கைப்பற்றியுள்ளனர்.

## உலக வலுதூக்கல் சம்பியன்ஷிப் போட்டியில் யாழ். வீராங்கனைகள் மூவர் பங்கேற்பு







தாய்லாந்தில் இன்று இடம்பெறவுள்ள உலக வலுதூக்கல் சம்பியன்ஷிப் போட்டிக்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வீராங்கனைகள் மூவர் பங்கேற்கவுள்ளனர்.

12 ஆவது உலகளாவிய வலுதூக்கல் போட்டி இன்று வியாழக்கிழமை தாய்லாந்தில் நடைபெறவுள்ளது. இப்போட்டியில் யாழ் வீராங்கனைகளான வி.ஆஷிகா. ஜெ.ஜெகனிகா மற்றும் ச. புளோரிஷ்ரா ஆகியோர் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3-90)

## ரி20 தொடரைக் கைப்பற்றி வரலாறு படைத்தது பங்களாதேஷ்

### சொந்த மண்ணில் இலங்கை சோகமானது



மூன்றாவது "ரி20" போட்டியில் 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி, இலங்கை மண்ணில் முதன் முறையாக "ரி20" தொடரை கைப்பற்றி வரலாறு படைத்தது.

இலங்கை வந்த பங்களாதேஷ் அணி, மூன்று போட்டிகள் கொண்ட "ரி20" தொடரில் பங்கேற்றது. முதலிரண்டு போட்டிகளின் முடிவில் தொடர் 1-1 என சமநிலையில் இருந்தது. கொழும்பில் 3வது போட்டி நடந்தது.

நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு குசல் மெண்டிஸ் (6), குசல் பெரேரா (0), தினேஷ் சண்டிமல் (4), அணித் தலைவர் சரித் அசலங்க (3) ஏமாற்றினர். பதும் நிசங்க (46), கமிந்து மெண்டிஸ் (21), தசுன் ஷனகா (35*) கைகொடுத்தனர்.

20 ஓவர்கள் நிறைவில் இலங்கை அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 132 ஓட்டங்கள் எடுத்தது.

எட்டக்கூடிய இலக்கை விரட்டிய பங்களாதேஷ் அணிக்கு அணித் தலைவர் லிட்டன் தாஸ் (32) நம்பிக்கை கொடுத்தார். அபாரமாக ஆடிய தன்ஜித் ஹசன் அரைச்சதம் விளாசினார். பங்களாதேஷ் அணி 16.3 ஓவரில் 2 விக்கெட்டுக்களை இழந்து 133 ஓட்டங்களை எடுத்து வெற்றி பெற்றது. தன்ஜித் ஹசன் (73), தவ்ஹித் (27) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பங்களாதேஷ் அணி 2-1 என தொடரைக் கைப்பற்றி, கிண்ணத்தை சுவீகரித்தது. ஆட்டநாயகன் விருதை பங்களாதேஷின் மொஹிடி ஹசன் வென்றார். தொடர் நாயகன் விருதை பங்களாதேஷின் லிட்டன் தாஸ் (114 ஓட்.,) கைப்பற்றினார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடிக்கூழ்குடித்து ஆடிப் பாடி மகிழ்ந்திடுவோம்!



ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்த மானந்தம் தோழர்களே!
கூடிப்பனங்கட்டி கூழுங் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே!

பாசிப்பயறு வறுத்துக்குத்திச் செந்நெல்
பச்சை அரிசி இடித்துத் தெள்ளி,
வாசப்பருப்பை அவித்துக்கொண்டு நல்ல
மாவைப் பதமாய் வறுத்தெடுத்து,

வேண்டிய தேங்காய் உடைத்துத் துருவியே
வேலூரில் சக்கரையுங்கலந்து,
தோண்டியில் நீர்விட்டு மாவை அதிற்கொட்டி
சுற்றிக் குழைத்துத் திரட்டிக்கொண்டு.

வில்லை வில்லையாக மாவைக் கிள்ளித்தட்டி
வெல்லக் கலவையை உள்ளே இட்டு
பல்லுக் கொழுக்கட்டை அம்மா அவிப்பாளே
பார்க்கப் பார்க்கப் பசி தீர்ந்திடுமே!

பூவைத் துருவிப் பிழிந்து பனங்கட்டி
போட்டு மாவுண்டை பயறுமிட்டு
மாவைக் கரைத்தம்மா வார்த்துத் துழாவுவள்
மணக்க மணக்க வாயூறிடுமே

குங்குமப் பொட்டிட்டு பூமாலை சூடியே
குத்து விளக்குக் கொளுத்தி வைத்து
அங்கிளநீர் பழம் பாக்குடன் வெற்றிலை
ஆடிப் படைப்பும் படைப்போமே

வண்ணப் பலாவிலை ஓடிப்பொறுக்கியே
வந்து மடித்ததைக் கோலிக்கொண்டு
அன்னை அகப்பையால் அள்ளி அள்ளி வார்க்க
ஆடிப் புதுக்கூழ் குடிப்போமே

வாழைப் பழத்தை உரித்துத் தின்போம் நல்ல
மாவின் மாவின் பழத்தை அறுத்துத் தின்போம்
கூழைச் சுடச் சுட ஊதிக்குடித்துக்
கொழுக்கட்டை தன்னைக் கடிப்போமே

ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்த மானந்தம் தோழர்களே
கூடிப் பனங்கட்டிக் கூழுங் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே!

**எழுதியவர்: நவாலியூர் சோமசுந்தரப்புலவர்**

இன்று ஆடிப்பிறப்பு. இப் பண்டிகை தமிழ் சமூகத்தில் மிக முக்கியத்துவம் வாய்ந்த பண்டிகையாகும். குறிப்பாக ஈழத்தமிழர்கள் இந்தப் பண்டிகையை தமது கலாசார, பண்பாட்டு முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வாக கொண்டாடி வருகின்றனர். அன்றைய நாளில் ஆடிக்கூழும், கொழுக்கட்டையும் தான் சிறப்பு உணவுகள்.

இந்த உணவுகள் தான் ஆடிப் பிறப்புப் பண்டிகை கொண்டாட்டத்தின் அடையாளங்கள். இந்த உணவுகள் ஈழத்தமிழ் மக்களின் பண்பாட்டு உணவுகள், இம்முறையும் ஆடிப்பிறப்பை ஒட்டி ஈழத்தமிழர் வீடுகளில் கூழ்காய்ச்சி, கொழுக்கட்டை அவித்து கொண்டாடி மகிழ்வர்.

சூரியன் வடதிசை நோக்கிச் செல்லும் தை தொடக்கம் ஆனி வரையுள்ள ஆறு மாத காலம் உத்தராயண காலம் எனப்படும். இது தேவர்களுக்கு ஒரு நாளின் பகல் பொழுதாகும். பின்னர் சூரியன் தெற்கு நோக்கிச் செல்லும் காலம் ஆடி முதல் மார்கழி வரையுள்ள ஆறு மாத காலம் தட்சணாயண காலம். இது தேவர்களுக்கு இராப் பொழுதாகும். தட்சணாயணத்தின் ஆரம்ப தினம் ஆடிமாத முதலாம் நாள் ஆகும். இக்காலம் கோடை கால வெப்பம்தணிந்து குளிர்மை படிப்படியாகப் பெருகும் இயல்புடையது.

ஆடிப்பிறப்பிற்கு நாளை விடுதலை என்ற பாடல்தான் ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரையில் ஆடிப்பிறப்பு நாளில் நினைவுக்கு வரும். இந்தப் பாடலை ஈழப் புலவர்களில் ஒருவரான நவாலியூர் சோமசுந்தரப் புலவர் பாடியுள்ளார்.

பண்டிகை நாட்களில் மனதில் பெரும் மகிழ்ச்சியோடு, உறவுகள் கூடியிருப்பது தான் மகிழ்ச்சியையும் கொண்டாட்டதையும் புது தொடக்கத்தையும் தருகிறது.

# விபுலானந்தர் மாநாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் துறவற நூற்றாண்டு நிறைவையொட்டிய விபுலானந்தர் மாநாடு நாளை மறுதினம் சனிக்கிழமை காலை மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்திலிருந்து முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் திருவுருவப்பட ஊர்வலமும் பின்னர் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் முத்தமிழ் அரங்கும், மாலை நிகழ்வாக நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் இசை அரங்கும், 20 ஆம் திகதி நல்லூர் துர்க்காமணிமண்டபத்தில் காலை நிகழ்வாக ஆய்வரங்கும், மாலை நிகழ்வாக நாடக அரங்கும் நடைபெறவுள்ளன.

இம்மாநாட்டின் முதலாம் நாள் நிகழ்வு புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் ஹினிதும சுனில் செனவி தலைமையில் இலங்கைப் பாராளுமன்ற சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன பங்கேற்புடன் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)


பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலையில் அதிபராகக்
கடமையாற்றி
இலங்கை ஆசிரியர்
கல்வியியலாளர் சேவைக்கு
தெரிவு செய்யப்பட்ட

திரு.விக்ரர் சுதாகரன்
(NDT, BA,MA,PGDE,MEd)

அவர்கள் வவுனியா தேசிய கல்வியியற்
கல்லூரியில் விரிவுரையாளராக
கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.
இவரைப் பாராட்டி மேலும் பல
உயர்வுகள் பெற வாழ்த்துகின்றோம்

(4811)

Best wishes!



வாழ்த்துவோர்– பாடசாலை சமூகம்
யா/சென் ஜேம்ஸ் மகா வித்தியாலயம்.


# மக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்வது அவசியம்

## வேலணை தவிசாளர் சுட்டிக்காட்டு

(அராலி)

மக்களின் எதிர்பார்ப்புக்களை முன்னெடுக்கும் வகையில் பிரதேச சபையின் செயற்பாடுகள் இருப்பது அவசியம் என வேலணைப் பிரதேச சபையின் தவிசாளர் வலியுறுத்தியுள்ளார்.

வேலணை பிரதேச சபையின் இரண்டாவது மாதாந்த கூட்டம் நேற்று தவிசாளர் அசோக்குமார் தலைமையில் காலை 10 மணிக்கு சபையின் சபாமண்டபத்தில் நடை பெற்றது.

இதன்போது பிரதேசத்தின் கடந்த காலத்தில் முன்னெடுத்து தொடரப்படவேண்டிய மற்றும் எதிர்காலத்தில் முன்னகர்த்தப்படவுள்ள பல்வேறு அபிவிருத்தி மற்றும் வேலைத் திட்டங்களின் முன்மொழிவுகள் குறித்து சபையில் பிரஸ்தாபிக்கப்பட்டு உறுப்பினர்களால் அவற்றின் ஏதுநிலைகள் குறித்து பரஸ் பரம் விவாதிக்கப்பட்டு சில வற்றுக்கு தீர்வுகளும் எட்டப்பட்டன. இந்நிலையில் தவிசாளர் தனது ஆரம்ப உரையில் - இந்தச் சபை மக்களால் மக்களின் நலன்களை முன்னெடுக்கவென்றே தெரிவுசெய்யப்பட்டது.

ஆனாலும் நிர்வாக கட்டமைப்பு அரச அதிகாரிகள் என்ற ஒரு கட்டமைப்புடனான இயந்திரமாகவே இருக்கின்றது.

இந்த இயந்திரமான அரச ஊழியர்களின் ஒத்துழைப்பு எமக்கு முழுமையாக கிடைத்தால் மட்டும்தான் அதன் இயங்கு நிலையை முழுமையாக இயக்கிக் கொண்டுசெல்ல முடியும் என நம்புகின்றேன்.

அந்தவகையில் அனைவரும் மக்களின் நலனில் அக்கறையுடன் பயணித்து மக்களின் எதிர்பார்ப்புகளையும் அபிலாசைகளையும் நிறைவு செய்து கொடுப்பது அவசியம் என வலியுறுத்தியிருந்தார். (ஜ-124)

# நாய்கள் காப்பகம் அமைக்க

## சாவகச்சேரி நகரசபை தீர்மானம்

(சாவகச்சேரி)

நகரத்தில் கட்டாக்காலி நாய்களின் தொல்லையைக் கட்டுப்படுத்தவும் விபத்துக்களைத் தவிர்க்கவும் நகரத்தில் உள்ள நாய்களை அகற்றி பராமரிப்பதற்காக காப்பகம் அமைப்பதற்கு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக சாவகச்சேரி நகரசபையின் உபதவிசாளர் ஞா.கிஷோர் தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி நகரசபையின் மாதாந்த அமர்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இதன்போதே நகரசபையின் உபதவிசாளர் ஞா.கிஷோர், நாய்கள் காப்பகம் அமைப்பதற்கான பிரேரணையினை முன்வைத்து உரையாற்றினார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

நகரத்தில் கட்டாக்காலி நாய்களினால் பொதுமக்கள் பல்வேறு இடர்பாடுகளை எதிர்நோக்குவதோடு விபத்துக்களும் ஏற்படுகின்றது.

நாய்களை நகரத்தில் இருந்து அகற்றி கருத்தடை செய்து பாராமரிக்க வேண்டிய தேவை உள்ளது.

வெறுமனே வீதிகளில் திரிகின்ற நாய்களுக்கு உணவினை போடுவது மட்டும் ஜீவ காருண்யம் இல்லை. நாய்களை உரிய முறையில் சிகிச்சையளித்து கருத்தடை செய்து பராமரிக்க வேண்டும்.

எனவே எமது நகரசபை எல்லைக்குள் உள்ள கட்டாக்காலி நாய்களை கட்டுப்படுத்துவதற்கு கால்நடை வைத்தியசாலை அமைந்துள்ள சூழலில் நாய்கள் காப்பகம் ஒன்றை அமைக்கவேண்டும்.

இலங்கையில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் நாய்கள் காப்பகம் அமைக்கும் பணியை எமது சாவகச்சேரி நகராட்சி மன்றமே முதன் முதலில் முன்னெடுப்பதாக இருக்கும் சூழ்நிலையில் பல்வேறு தரப்பினரும் எமது முன்மாதிரியான வேலைத்திட்டத்திற்கு பெரும் பங்களிப்பினை வழங்குவார்கள் என தனது பிரேரணையை முன்வைத்து உரையாற்றியிருந்தார்.

குறித்த பிரேரணையை சபை உறுப்பினர்கள் வரவேற்றிருப்பதாகவும், கடந்த காலங்களில் தனியார் அமைப்புக்கள் நாய்கள் காப்பகம் அமைத்து இடைநடுவில் கைவிட்டதினை போலல்லாமல் சிறப்பாக தொடர்ச்சியாக முன்னெடுக்க வேண்டும் எனவும் தெரிவித்ததோடு குறித்த பிரேரணையினை ஏகமனதாக நிறைவேற்றியிருந்தனர் எனவும் மேலும் அவர் தெரிவித்துள்ளார். (நி- 30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாவிட்டபுர கந்தசுவாமி ஆலய வருடாந்திர மகோற்சவ திருக்கைலாச வாகனம் கடந்த 14 ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து மாலை வசந்தமண்டப பூஜை இடம்பெற்று வள்ளி, தெய்வானை சமேதரராய் உள்வீதியுலா வந்த மாவை கந்தன், கைலாச வாகனத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருட்காட்சி அளித்தார். (படம்: சிவசாந்தன்)



யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தின் மேலதிக அரசாங்க அதிபராக (காணி) பாலசுந்தரம் ஜெயகரன் நேற்றைய தினம் காலை 9 மணிக்கு அரசாங்க அதிபர் முன்னிலையில் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். இந் நிகழ்வில் பிரதம கணக்காளர், திட்டமிடல் பணிப்பாளர், பிரதம பொறியியலாளர், பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், உதவி மாவட்டச் செயலாளர், கணக்காளர்கள், நிர்வாக உத்தியோகத்தர் உள்ளடங்கலான பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டார்கள். (படம்: சிவசாந்தன்)

# வடக்கு கிழக்கை கட்டியெழுப்ப ஒத்துழைப்பு வழங்குவோம்

## கனடா தூதுவர்

(யாழ்ப்பாணம்)

போரால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கை மீளக் கட்டியெழுப்புவதற்கு கனடாவும் தம்மால் முடிந்த ஒத்துழைப்பை வழங்கும் என அந்நாட்டு தூதுவர் தேசிய மக்கள் சக்தியின் யாழ் . மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களிடம் உறுதியளித்துள்ளார்.

இலங்கைக்கான கனடா தூதுவருக்கும் தேசிய மக்கள் சக்தியின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான ஜெ.ரஜீவன், ஸ்ரீபவானந்தராஜா மற்றும் க.இளங்குமரன் ஆகியோருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

இதன்போது யாழ். மாவட்டத்தின் தற்போதைய நிலவரம், காணி பிரச்சினை, வடக்கை இலக்காகக் கொண்டு அமையவுள்ள முதலீட்டு வலயங்கள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளன.

தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அரசியல், பொருளாதார மற்றும் சமூக பிரச்சினைகளுக்கு நிச்சயம் தீர்வுகள் முன்வைக்கப்படும் என்ற நம்பிக்கை தமக்கு இருப்பதாகவும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தூதுவரிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்துடன் வடக்கு, கிழக்கை கட்டியெழுப்பும் அரசாங்கத்தின் திட்டங்களுக்கு கனடாவும் உதவி நல்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர். இதற்கு கனடா தம்மால் முடிந்த ஒத்துழைப்புகளை வழங்கும் என தூதுவர் பதிலளித்துள்ளார்.

மேலும் வடக்கில் பெண் தலைமைத்துவ குடும்பங்களை இலக்கு வைத்து கனடாவால் முன்னெடுக்கப்படவுள்ள வேலைத்திட்டம் வெற்றியளிக்க அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்கும் எனவும் உறுப்பினர்கள் தூதுவரிடம் தெரிவித்தனர்.

இலங்கைக்கான கனடா தூதுவர் தமது சேவைக்காலம் முடிவடைந்து இம்மாதத்துடன் தாயகம் திருப்பவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (8-33)



யாழ்ப்பாணம் மாநகரசபையின் பிரதி முதல்வர் இம்மானுவல் தயாளன் யாழ்ப்பாணம் கேற்வே லயன்ஸ் கழகத்திடம் முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாக இரண்டு புல் வெட்டும் இயந்திரங்கள் அண்மையில் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு கையளிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு வருகைதந்த லயன்ஸ் கழகத்தினர் யாழ்ப்பாணம் மாநகரசபை பிரதி முதல்வர் இ.தயாளன், மாநகர ஆணையாளர் ச.கிருஸ்ணேந்திரன் மற்றும் மாநகரசபை உறுப்பினர்கள் அடங்கிய குழுவினரிடம் மேற்படி புல் வெட்டும் இயந்திரங்களையும் கையளித்தனர்.

# கைதடியின் நிலத்தடி நீருக்கு பாதிப்பு ஏற்படும் அபாயம்!

## பிரதேச சபை உறுப்பினர்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பிரதேசசபையின் ஆளுகைக்கு உட்பட்ட கைதடியில் இருந்து காரைநகர் பகுதியில் அமைந்துள்ள ஐஸ் தொழிற்சாலைக்கு தினமும் அதிகளவான நீரை எடுத்துச் செல்வதனால் கைதடியின் நிலத்தடி நீருக்கு பாதிப்பு ஏற்படும் அபாயம் காணப்படுவதாக சாவகச்சேரிப் பிரதேசசபை உறுப்பினர் செ.ஜயபாலன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் சாவகச்சேரிப் பிரதேசசபையில் இடம்பெற்ற கன்னி அமர்வின் போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில், கைதடி மத்தி உதய சூரியன் சனசமூக நிலையத்திற்கு அருகில் உள்ள கிணற்றில் இருந்து காரைநகரில் உள்ள ஐஸ் தொழிற்சாலைக்கு தினமும் முப்பதாயிரம் லீற்றர் நீர் பவுசர் மூலம் எடுத்துச் செல்லப்படுகின்றது.

உரிய அனுமதி பெறப்பட்டே எடுத்துச் செல்வதாக தெரிவிக்கப்படுகின்ற போதிலும் பிரதேச சபை அது தொடர்பாக ஆராய வேண்டும்.

ஒரு நாளைக்கு எவ்வளவு நீரினை எடுக்க முடியும் என்பது தொடர்பில் ஆராய வேண்டும்.

தொடர்ந்து அதிகளவான நீரை எடுத்துச் செல்வதன் மூலம் கைதடியில் உள்ள கிணற்று நீர் உவர் நீராக மாற்றமடையும் அபாயமுள்ளது.

அத்துடன் மேற்படி கிணற்றில் இருந்து கைதடி மற்றும் நாவற்குழி பகுதிகளில் நான்கு கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கும் நீர் விநியோகம் செய்யப்படுகின்றது.

இதனால் மேற்படி குடிநீர் விநியோகமும் எதிர்காலத்தில் பாதிப்படையக்கூடிய ஏது நிலை காணப்படுகின்றது என்றார். (8-30)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 250 | 350 | 300 | 300 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 200 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 450 | 300 | 450 | 350 | 400 |
| தக்காளி | 150 | 200 | 200 | 120 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 300 | 280 | 220 | 200 |
| கோவா | 300 | 400 | 500 | 300 | 400 |
| கரட் | 400 | 450 | 550 | 400 | 400 |
| பூசணி | 100 | 160 | 130 | 100 | 200 |
| புடோல் | 100 | 150 | 200 | 100 | 200 |
| வாழைக்காய் | 150 | 120 | 120 | 100 | 150 |
| சின்ன வெங்காயம் | 450 | 150-350 | 350 | 350 | 450 |
| பெரிய வெங்காயம் | 120 | 160 | 130 | 110 | 140 |
| பாகற்காய் | 650 | 600 | 650 | 500 | 400 |
| வெண்டக்காய் | 150 | 150 | 170 | 90 | 200 |
| கருணைக் கிழங்கு | 350 | 300 | 200 | 250 | 400 |
| பயற்றங்காய் | 250 | 250 | 300 | 300 | 200 |
| லீக்ஸ் | 300 | 300 | 300 | 240 | 200 |
| பீற்றூட் | 250 | 200 | 250 | 180 | 200 |
| கறிமிளகாய் | 500 | 650 | 600 | 500 | 600 |
| முருங்கைக்காய் | 400 | 600 | 600 | 450 | 500 |
| போஞ்சி | 600 | 500 | 500 | 500 | 600 |
| கத்தரிதம்புள்ள | 200 | 200 | 300 | -- | 250 |
| கீரை – 1 பிடி | 80 | 40-120 | 120 | 80 | 100 |
| தேசிக்காய் | 300 | 300 | 300 | 250 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 160 | 180 | 120 | 80-150 | 120-180 |
| இராசவள்ளி | 600 | 700 | 600 | 500 | 700 |
| வெங்காயப்பூ | 400 | 600 | 500 | 400 | 400 |
| முள்ளங்கி | 200 | 160 | 160 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 50 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 70 | 100 | 80 | 80 |
| ஈரப்பலா | 150 | 150 | 100 | 80 | 200 |

# காதுகளால் வாகனத்தை இழுத்து புதிய சாதனை



மட்டுவிலைச் சேர்ந்த முதியவர் ஒருவர் காதுகளால் வாகனத்தை இழுத்து புதிய சாதனையைப் படைத்துள்ளார்.

மட்டுவிலைச் சேர்ந்த 61 வயதுடைய செல்லையா திருச்செல்வம் என்பவரே இச் சாதனையை புரிந்துள்ளார்.

பல்வேறு சாதனைகளை புரிந்து வரும் இவர் மட்டுவில் சந்திரபுரத்தில் புதிய சாதனை ஒன்றை நிகழ்த்தியுள்ளார்.

இவர் தனது இரு காதுகளையும் பயன்படுத்தி 2 ஆயிரத்து 50 கிலோ எடை கொண்ட பிக்கப் ரக வாகனத்தை 50 மீற்றர் தூரத்துக்கு இழுத்துச் சாதனை புரிந்துள்ளார்.

உலக சாதனையை நிகழ்த்துவதற்காக அவர் இந்த சாதனையை நிகழ்த்தியுள்ளார்

மேலும் அவர் தனது தாடியால் அதே வாகனத்தை 50 மீற்றர் தூரத்துக்கு இழுத்து சாதனை படைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசுவமடு விவசாயிகள் ப.நோ.கூ.சங்கம் (வ-து)
## அறிவித்தல்
### கிளைக்குழுக்களைத் தெரிவு செய்தல் – 2025.07.19

வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998.05.19 ஆம் திகதியாக 1028/06 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தகமானியில் வெளியிடப்பட்டதுமான வடக்கு கிழக்கு மாகாண நிர்வாக எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்காக ஆக்கப்பட்ட விதிகளுக்கு அமைய முல்லைத்தீவு மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகிய நான் 2023.08.10 ஆம் திகதிய 2344/27 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தகமானி மூலம் என்மீது பாரிக்கப்பட்ட அதிகாரங்களின் படி மேற்படி சங்கத்தின் துணைவிதி 28 இற்கு அமைய சங்கத்தின் சகல கிளைகளுக்குமான கிளைக்குழு தெரிவுக்கான கிளைப்பொதுச்சபைக் கூட்டங்களை பின்வரும் கால அட்டவணையின் படி நடாத்துவதற்கும் இந்தக் கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் கீழ்வரும் அலுவலர்களைப் பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

01. இதற்கமைய இக்கூட்டங்களுக்கு சமூகமளித்து வாக்களிக்க தகைமையுள்ள உறுப்பினர்களுக்கு தனித் தனி அறிவித்தல்கள் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

02. கிளைப்பொதுக் கூட்டத்திற்கான நிறைவெண் கூட்டத்திற்குச் சமூகமளித்து வாக்களிக்கத் தகைமையுள்ள உறுப்பினர்களில் 1/4 பங்கினர் அல்லது 25பேர் இதில் எது குறைவோ இவ் எண்ணிக்கையாகும்.

03. கிளைப்பொதுச்சபைக் கூட்டத்திற்கு சமூகமளித்துள்ள உறுப்பினர் மத்தியிலிருந்து ஏழு (07) பேரும் மகளீர் குழுவிலிருந்து இருவரும் (02) மொத்தம் ஒன்பது (09) உறுப்பினர்கள் கிளை குழுவிற்கு தெரிவு செய்யப்படுவர். இவர்களில் குறைந்தது இருவராவது 18 - 35 வயதிற்கிடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

04. தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்களை தவிசாளர் கிளையின் பொதுச்சபையில் பிரகடனப்படுத்துவதுடன் சங்க செயலாளருக்கும் எனக்கும் எழுத்து மூலம் அறிவிப்பர்.

05. கிளைக்குழு பொதுச்சபைக் கூட்டத்திற்கு வாக்களிக்க தகுதியுடைய உறுப்பினர்களுக்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் 19.05.1998 ஆம் திகதிய 1028/06 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய கூட்ட அறிவித்தல் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அறிவித்தல் கிடைக்காத வாக்களிக்க தகுதியுடைய அங்கத்தவர்களும் இவ்வறிவித்தலை தனிப்பட்ட அறிவித்தலாக கருதி அன்றைய கூட்டத்திற்கு சமூகமளித்து தங்கள் ஜனநாயக உரிமையை பயன்படுத்தி கூட்டுறவு அமைப்பினை ஜனநாயக ஆளுமை கொண்டதாக செயற்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

***கிளைப் பொதுச்சபைக் கூட்டதிகதி 19.07.2025 சனிக்கிழமை, நேரம் - முற்பகல் 10.00மணி***
***கூட்டம் நடைபெறும் இடங்கள் - விபரம் கீழ்வருமாறு***

| கிளை இல | கிளையின் பெயர் | தவிசாளரின் பெயர் | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 01. | விசுவமடு மேற்கு | திரு. அ. பிரமிளன் | அதிசய விநாயகர் கோயில் மண்டபம் |
| 02. | விசுவமடு கிழக்கு | திரு. அ. வசிகரன் | தலைமைக் காரியாலய மண்டபம் |
| 03. | வள்ளுவர்புரம் | திரு. இ. கஜெந்தன் | கிராமிய வங்கி வள்ளுவர்புரம் மண்டபம் |
| 04. | பிரமந்தனாறு | திரு. சி. பாலசுந்தரம் | சித்தி விநாயகர் கோயில் மண்டபம் |

**கீழ் குறிப்பிடப்படுவோர் கிளைக்குழு உறுப்பினர்களாக தெரிவு செய்யப்படும் தகைமை அற்றவர்களாவார்.**

அ. பதினெட்டு (18) வயதுக்குட்பட்டவர்.

ஆ. கடனை தீர்க்க வகையற்றவர் என பிரகடனம் செய்தவர் அல்லது அவ்வாறு ஒரு வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டவர்.

இ. அதிகாரமளிக்கப்பட்டவரால் சித்தசுவாதீனமற்றவர் என பிரகடனம் செய்யப்பட்டவர்.

ஈ. மூன்று ஆண்டுகளுக்குள் தீய ஒழுக்கச் செயலுக்காகக் குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டவர். அல்லது மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட சிறைத்தண்டனைக்கு தீர்ப்பளிக்கப்பட்டவர்.

உ. இச்சங்கத்தில் பெற்ற கடனை அல்லது வேறு ஒரு பதிவு செய்யப்பட்ட சங்கத்தில் அல்லது வேறு சங்க ஒழிப்போனுக்கு மூன்று மாதத்திற்கு மேற்பட்ட காலத்திற்குத் தவணை தப்பியவராகவுள்ள ஒருவர் அல்லது இச்சங்கத்திற்கு அல்லது வேறு ஒரு பதிவு செய்யப்பட்ட சங்கத்திற்கு அல்லது ஒழிப்போனுக்கு வேறு வகையான சென்மதியொன்றைச் செலுத்தத் தவறிய ஒருவர்.

ஊ. இத்துணைவிதிகளில் குறிப்பிட்ட தொகையான பங்கு ஒன்றினையேனும் கொண்டிராத ஒருவர்.

எ. சங்கத்தின் பொதுச்சபையின் அபிப்பிராயப்படி உறுப்பினர் என்ற முறையில் தவிர, நடைமுறையிலுள்ள அல்லது பேரப்பேச்சளவில் இருக்கும் சங்கத்தின் ஒப்பந்தத்திலோ நிதி அல்லது வேறு வகை கொடுக்கல் வாங்கல்களிலோ அல்லது சங்கம் செய்யும் ஒரு விற்பனையிலோ அல்லது கொள்வனவிலோ நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அக்கறை கொண்டுள்ள ஒருவர்.

ஏ. சங்கத்தின் பொதுச் சபையின் அபிப்பிராயத்தின் படி சங்கத்தின் நலன்களோடு மாறுபடுகின்ற ஒரு வியாபாரத்திலோ அல்லது வேறு நடவடிக்கையிலோ நேரடியாகவோ மறைமுகமாகவோ ஈடுபட்டுள்ள ஒருவர்.

ஐ. இச்சங்கத்திலோ அல்லது இச்சங்கம் உறுப்பினராகவுள்ள பிறிதொரு சங்கத்திலோ சம்பளம் பெறும் பணியாளராகவுள்ள ஒருவர்.

ஒ. சட்டத்தில் குறிப்பிட்ட தகுதியீனங்களையுடைய ஒருவர்.

ஓ. பாராளுமன்ற, மாகாணசபை, நகரசபை, பிரதேசசபையில் உறுப்பினராக உள்ளவர்.

ஔ. சங்கத்தின் நடவடிக்கைகளில் தொடர்ச்சியாக 06 மாதங்களுக்கு மேல் ஈடுபாடில்லாதிருப்பதைச் சம்பந்தப்பட்ட கிளைக்குழுவால் உறுதிப்படுத்தப்பட்டவர்.

வி. ஜெயந்தன்,
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்,
முல்லைத்தீவு.

(சி-3429)

## க.பொ.த.சாதாரண தரப்பரீட்சை பெறுபேறுகள்-2024

### யா/அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயம்

கே.கிஸாஜினி 6ஏ, எஸ்.ஜீவமதுசா 4ஏ, ஆர்.மதுசியா 4ஏ.

### யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

**9ஏ ஆங்கிலமொழி மூலம்**
சி. ரிஷான்

(அண்மையில் வெளியான க.பொ.த சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்கள் 82 மாணவர்கள் 9ஏ பெறுபேறுகளை பெற்றிருந்தனர்.

இந் நிலையில் 14.07.2025 அன்று வெளியான சிவகரன் ரிஷான் என்ற மாணவனின் பெறுபேறு 8ஏ, சி என தவறுதலாக பிரசுரமாகியுள்ளது.)

## ஒதியமலை எல்லைக்கிராம மக்களின் போக்குவரத்து இடர்பாட்டிற்குத் தீர்வு

(வவுனியா)

முல்லைத்தீவு மாவட்டத்தின் தமிழர்களது பூர்வீக எல்லைக்கிராமங்களில் ஒன்றான ஒதியமலைக்கிராம மக்களின் போக்குவரத்து இடர்பாடு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் முயற்சியால் தீர்த்துவைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவின் எல்லைக்கிராமங்களின் ஒன்றான ஒதியமலைக் கிராமம் தொடக்கம், கிளிநொச்சி வரையான வழித்தட அனுமதிப் பத்திரமுள்ள தனியார் பேருந்து நீண்டகாலமாக ஒதியமலைக் கிராமத்திற்கு சேவையை வழங்குவதில்லை.

குறிப்பாக கிளிநொச்சியிலிருந்து ஒட்டுசுட்டான் வரையிலேயே இந்த போக்குவரத்து சேவை இடம்பெற்றிருந்தது.

இதனால் ஒதியமலைக் கிராம மக்கள் மற்றும் ஒதியமலையிலிருந்து வெளியிடங்களுக்கு பாடசாலைகளுக்குச்செல்லும் மாணவர்கள் போக்குவரத்து இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்து வந்தனர்.

இந் நிலையில் ஒதியமலைக்கிராம மக்களால் வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனிடம் இதுதொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில் கடந்த 3ஆம் திகதி இடம்பெற்ற ஒட்டுசுட்டான் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் ஒதியமலைக் கிராமத்திற்கு குறித்த பேருந்து, சேவையை வழங்காமை குறித்து வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனால் சுட்டிக்காட்டப்பட்டது.

அதனையடுத்து கடந்த 14 ஆம் திகதி முதல் முல்லைத்தீவின் எல்லைக் கிராமமான ஒதியமலைக் கிராமத்திலிருந்து பேருந்து சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (8-299)

## கழுத்தில் கத்தி; மிரட்டி நகைகொள்ளை

(நெளுக்குளம்)

மோட்டார் சைக்கிளில் வீதியால் சென்ற பெண்ணை வழிமறித்து தங்க சங்கிலியை பறிமுதல் செய்த கொள்ளையர்கள் இருவர் ஊர் மக்களால் மடக்கிப்பிடிக்கப்பட்ட சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

முல்லைத்தீவு - முள்ளியவளை பொன்னகர் கிராமத்தில் உள்ள வளர்மதி மைதானத்திற்கு அருகாமையில் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் வீதியால் பயணித்தபோது இனந்தெரியாத கொள்ளையர்கள் இருவர் குறித்த பெண்ணை வழி மறித்து கழுத்தில் கத்தியினை வைத்து மிரட்டி கழுத்தில் அணிந்திருந்த நான்கரை பவுண் தங்க சங்கிலியைப் பறித்து கொண்டு தப்பி சென்றிருந்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் உடனடியாக குறித்த பெண் கிராம மக்களுக்கு தெரியப்படுத்தியதையடுத்து ஊர்மக்கள் இணைந்து கொள்ளையர்கள் இருவரையும் மடக்கிப்பிடித்து முள்ளியவளை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முள்ளியவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.


குறித்த சம்பவத்தில் 32, 22 வயதுடைய தருமபுரம், விசுவமடு பகுதியினைச் சேர்ந்தவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர். (நி-8-29௮)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## ரஷ்யாவிற்கு மேலும் வலுவான ஆதரவு

### சீனா அதிரடி அறிவிப்பு



(பீஜிங்)

ரஷ்யாவிற்கான ஆதரவை மேலும் வலுப்படுத்தப்போவதாக சீனா அறிவித்துள்ளது.

புதிய வரிகள் குறித்து ரஷ்யாவிற்கு அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ள நிலையிலேயே சீனா இதனை தெரிவித்துள்ளது.

இருநாடுகளும் பல தரப்புஅரங்குகளில் பரஸ்பரம் தங்கள் உறவை மேலும் வலுப்படுத்த வேண்டும் என ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் சேர்கேய் லவ்ரோவை சந்தித்த பின்னர் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் தெரிவித்துள்ளார்.

சீனாவிற்கும் ரஷ்யாவிற்கும் இடையிலான நம்பிக்கை மேலும் வலுவடைந்துள்ளது என தெரிவித்துள்ள அவர் இருநாடுகளும் சர்வதேச உறவுகளிற்கான புதிய மாதிரியை உருவாக்குகின்றன என தெரிவித்துள்ளார்.

இதேவேளை அமெரிக்க ஜனாதிபதியின் வரி அதிகரிப்பு அச்சுறுத்தல் குறித்து கருத்து வெளியிட்டுள்ள சீன வெளிவிவகார அமைச்சு அனைத்து ஒருதலைப் பட்சமான சட்டவிரோத தடைகளையும் எதிர்ப்பதாக தெரிவித்துள்ளது.

வரிப்போரில் வெற்றியாளர்கள்எவரும்இல்லை வற்புறுத்தலும் அழுத்தமும் பிரச்சினைகளை தீர்க்காது என சீன வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (நி)

## ரஷ்யாவுடன் வர்த்த

## மீறினால் ஆபத்தை எதிர்

### நேட்டோ கடும்

**(வோஷிங்டன்) "ரஷ்யா உடன் வர்த்தகம் செய்து அதன் எண்ணெய் மற்றும் எரிவாயுவை வாங்குவதைத் தொடர்ந்தால், சீனா, இந்தியா மற்றும் பிரேசில் கடும் தடைகளை எதிர்கொள்ள நேரிடும்" என நேட்டோ அமைப்பு பொதுச் செயலாளர் மார்க் ரூட் எச்சரித்துள்ளார்.**

இது குறித்து, நேட்டோ அமைப்பு பொதுச் செயலாளர் மார்க் ரூட் கூறியதாவது:

நீங்கள் சீனாவின் ஜனாதிபதியாகவோ, இந்தியப் பிரதமராகவோ அல்லது பிரேசிலின் ஜனாதிபதியாகவோ இருந்து, ரஷ்யாவுடன் வர்த்தகம் செய்து அவர்களின் எண்ணெய் மற்றும் எரிவாயுவை வாங்குவதைத் தொடர்ந்தால், என்ன விளைவுகளை சந்திக்க நேரிடும் என்பது உங்களுக்குத் தெரியும்.

ரஷ்யாவுடன் தொடர்ந்து வர்த்தகம் செய்தால் கடுமையான தடைகளை எதிர்கொள்ள நேரிடும்.

அத்துடன் 100% பொருளாதார தடைகள் விதிக்கப்படும். இந்த மூன்று நாடுகளின் தலைவர்கள், புடினை அழைத்து தீவிர மான அமைதிப் பேச்சுவார் த்தைகளுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

எனவே தயவுசெய்து புடினுக்கு தொலைபேசி அழைப்பு

## 50 நாள் கெடு விதிப்பு - அமெரிக்கா அச்சுறுத்தலுக்கு அடிபணியோம் - ரஷ்யா

(மொஸ்கோ)

உக்ரைன் மீதான போரை நிறுத்த ரஷ்யாவுக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் 50 நாட்கள் கெடு விதித்தார். ரஷ்யா போரை தொடர்ந்தால் அந்நாட்டின் மீது 100% கடுமையான பொருளாதார தடைகளை விதிப்பேன் என ட்ரம்ப் எச்சரித்தார்.

இந்நிலையில் இந்த மிரட்டலுக்கு ரஷ்யா செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் பதிலளித்தார்.

தங்கள் நாடு யாருடைய அச்சுறுத்தல்களுக்கும் அடிபணியாது என்று தெரிவித்தார்.

டிமிட்ரி பெஸ்கோவ் கூறுகையில், "அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கூறிய கருத்துக்கள் மிகவும் தீவிரமானவை. குறிப்பாக. சில கருத்துக்கள் நமது ஜனாதிபதி புடினை தனிப்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ...தகம் வேண்டாம்
# ...தீர்கொள்ள வேண்டும்!

## ...ம் எச்சரிக்கை



விடுத்து. அமைதிப் பேச்சு வார்த்தைகளில், தீவிரமாக ஈடுபட வேண்டும் என்று வலியுறுத்துங்கள். இல்லையெனில் இது பிரேசில், இந்தியா மற்றும் சீனா மீது மிகப்பெரிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்தும் என அவர் தெரிவித்தார்.

"ரஷ்யாவின் எண்ணெய் வாங்குபவர்களில் இந்தியா முன்னணியில் உள்ளது. தடைகள் விதிக்கப்பட்டால் ஆபத்தை எதிர்கொள்ள நேரிடும்" என பொருளாதார நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். (நி)

பட்ட முறையில் குறிப்பிடுவதாக தெரிகிறது.

யாருடைய இறுதி எச்சரிக்கைகளையும் நாங்கள் பொருட்படுத்தவில்லை.

வோஷிங்டனின் கருத்துக்களை பகுப்பாய்வு செய்ய நாங்கள் நேரம் ஒதுக்குவோம்.

ஜனாதிபதி புடின் அவசியம் என்று கருதினால் நிச்சயமாக பதிலளிப்பார் என்று தெரிவித்தார். (நி)



# 1.4 கோடி குழந்தைகளுக்கு
# தடுப்பூசி வழங்கப்படவில்லை

## ஐ.நா சுகாதாரத்துறை தெரிவிப்பு




(ஜெனீவா)

உலகம் முழுவதும் கடந்த 2024ஆம் ஆண்டு 1.4 கோடி குழந்தைகளுக்கும் அதிகமானோருக்கு ஒரு தடுப்பூசி கூட செலுத்தப்படவில்லை என்று ஐ.நா சுகாதாரத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2020 இல் கொரோனா பெருந்தொற்று பாதிப்பின்போது அமுல்படுத்தப்பட்ட பொது முடக்கத்தின்போது குழந்தைகளுக்கு தடுப்பூசி செலுத்தப்படுவது தடைப் பட்டது.

அதன் பின்னர் குழந்தைகளுக்கான தடுப்பூசி செலுத்தப்படுவது முந்தைய நிலைக்கு இன்னும் திரும்பவில்லை.

சர்வதேச அளவில் தடுப்பூசி அளிக்கப்பட்டது தொடர்பான ஆய்வு அறிக்கை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டது.

அதுகுறித்து உலக சுகாதார அமைப்பு, யூனிசெப் அமைப்பு அதிகாரிகள் தெரிவிக்கையில், கடந்த ஆண்டு ஒரு வயதுக்கு குறைவான குழந்தைகளில் 89 சதவீதத்தினர் டிப்தீரியா, டெட்டானஸ், கக்குவான் இருமல் ஆகியவற்றின் முதல் தவணை தடுப்பூசியைப் பெற்றனர்.

85 சதவீதத்தினர் மூன்று தவணை தடுப்பூசிகளைப் பெற்றனர். இதே அளவிலேயே 2023 இல் தடுப்பூசி செலுத்தப்பட்டிருந்தது.

இந்த வகைத் தடுப்பூசிகள் ஆண்டு தோறும் 35 இலட்சம் முதல் 50 லட்சம் மரணங்களைத் தடுக்கின்றன என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

தட்டம்மை தடுப்பூசிகள் உலகம் முழுவதும் 76 சதவீதம் செலுத்தப்பட்டுள்ளன. ஆனால், இதை 95 சதவீதத்தை எட்டினால்தான் அதிகபடியான பரவல் பாதிப்பு ஏற்படுவதைத் தடுக்க முடியும். கடந்த ஆண்டு 60 நாடுகளில் தட்டம்மை பாதிப்பு அதிகரித்திருந்தது.

அமெரிக்காவில் தட்டம்மை பாதிப்பு கடந்த 30 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு அதிகரித்து வருகிறது. ஐரோப்பாவில் கடந்த ஆண்டு சுமார் 1,25,000 பேர் தட்டம்மையால் பாதிக்கப்பட்டனர்.

உலகில் தடுப்பூசி செலுத்தப்படாத மொத்த குழந்தைகளில் 52 சதவீதத்தினர் இந்தியா, நைஜீரியா, சூடான், காங்கோ, எத்தியோப்பியா, இந்தோனேசியா, ஜேர்மன், ஆப்கானிஸ்தான், அங்கோலா ஆகிய 9 நாடுகளில் உள்ளனர்.

உலக சுகாதார அமைப்புக்கு அளிக்கப்பட்டு வந்த மனிதாபிமான நிவாரண நிதி நிறுத்தப்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அறிவித்துள்ளதால், நிகழாண்டு குழந்தைகளுக்கு தடுப்பூசி செலுத்தும் சதவீதம் மேலும் மோசமாக இருக்கும் என்று ஐ.நா அதிகாரிகள் அச்சம் வெளியிட்டுள்ளனர். (நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# டிஜிற்றல் அடையாள அட்டை; மக்கள் அச்சப்படத் தேவையில்லை

## அரசு உறுதி

(கொழும்பு)

இந்தியா நிதியளிக்கும் டிஜிற்றல் தேசிய அடையாள அட்டை திட்டத்தில் தனிப்பட்ட தரவுகள் தொடர்பில் மீறல் எதுவும் ஏற்படாது என்று இலங்கை அரசாங்கம் உறுதியளித்துள்ளது.

இலங்கை குடிமக்களின் தரவு தனியுரிமை மற்றும் தனிப்பட்ட தரவுகளின் பாதுகாப்பு குறித்த கவலைகள் காரணமாக இந்தத் திட்டம் நீண்ட தாமதத்தை எதிர்கொண்டது.

எனினும் தற்போது குறித்த திட்டம் விரைவுபடுத்தப்படுகின்ற நிலையிலேயே இந்த உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தில் எந்தவொரு தரவு மீறலுக்கும் வழி இல்லை என்றும் அதை உறுதி செய்ய முடியும் என்றும் துணை டிஜிற்றல் பொருளாதார பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன தெரிவித்துள்ளார்.



அரசியல் நிகழ்ச்சி நிரல் காரணங்களுக்காக பல்வேறு பிரிவுகளால் பல்வேறு குற்றச்சாட்டுகள் இந்த விடயத்தில் சுமத்தப்படுகின்றன என்றும் அவர் கூறியுள்ளார்.

முகம், கருவிழி மற்றும் கைரேகை தரவு உள்ளிட்ட தகவல்களைச் சேகரிப்பதை நோக்கமாகக் கொண்ட டிஜிற்றல் அடையாள அட்டை திட்டத்துக்கு. ஏற்கனவே இந்தியா 450 மில்லியன் இந்திய ரூபாய்களை வழங்கியுள்ளது. (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1996- இந்து
நட்சத்திரம்: அனுசம்
8இல்செவ்
தகைமை/தொழில்: Dip inIT, Business (own)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்(வெளிநாடு)
தொ.இ: B/15801

பிறப்பு:1989-இந்து
நட்சத்திரம்:அனுசம்
கி-பா-10 1/2
உயரம்:5'7"
தகைமை/தொழில்-A/L, Engineer
எதிர்பார்ப்பு: உயர்பதவி
தொ.இ: B/15805

பிறப்பு:1987-இந்து
நட்சத்திரம்:அச்சுவினி
கி-பா- 39
உயரம்:5'7"
தகைமை/தொழில்:A/L, Restaurant (ஜேர்மனி)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15806

பிறப்பு: 1985- இந்து
நட்சத்திரம்:விசாகம்
கி-பா-78
7இல் செவ்
உயரம்:6'1"
தகைமை/தொழில்-BSc Msc MBA, Manager
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: B/15808

பிறப்பு: 1997- இந்து
நட்சத்திரம்:உத்தரட்டாதி
உயரம்:5'7"
தகைமை/தொழில்: Business Analyst
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15811

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-2000-இந்து
நட்சத்திரம்: ரோகினி
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: Bsc,Teacher
எதிர்பார்ப்பு: Doctor, Engineer, Teacher
தொ.இ: G/14590

பிறப்பு-1994-இந்து
நட்சத்திரம்-பூசம்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: Network Telecom Engineer(London)
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/14593

பிறப்பு-1998-இந்து
நட்சத்திரம்-விசாகம்
கி.பா -67
தகைமை/தொழில்: BA (following))
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/14596

பிறப்பு-1997-இந்து
நட்சத்திரம்:மகம்
கி.பா -06
உயரம்: 5'2"
தகைமை/தொழில் - Network System Engineer
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்,வெளிநாடு
தொ.இ: G/14599

பிறப்பு-1996-இந்து
நட்சத்திரம்-கேட்டை
2இல் சூரிசெவ்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு,விவாகரத்தானவர்
தொ.இ: G/15624

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 415



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## என்ன எதிர்பார்க்கிறார்கள்?

ஒரு நண்பரிடம் பேசிக்கொண்டிருந்தேன். அவருடைய உறவினர் ஒருவர் ஒரு "இன்டர்வியூ"க்குப் போய் இருந்தாராம். மிகவும் பொறுப்பாகவும் கவனமாகவும் செயற்பட வேண்டிய பதவிக்கான "இன்டர்வியூ" அது. இவரிடம் நிறைய "மார்க்" இருந்தது. ஏராளமான சேர்ட்டிபிக்கேற்றும் இருந்தது.

இன்டர்வியூலே கேட்ட எல்லா கேள்விகளுக்கும் மிகவும் சரியாக பதில் சொல்லி விட்டார்.

இருந்தாலும் அந்த நேர்முகத் தேர்விலே அவர் தேர்ந்தெடுக்கப் படவில்லை..!

என்ன காரணம் என்று பின்னால் விசாரித்த போதுதான் விபரம் தெரிந்ததாம். அந்த இன்டர்வியூலே இவர் நடந்துகொண்ட முறையிலே சில தவறுகள் நடந்து போனதாம்...

முக்கியமாக இரண்டு தவறுகள். ஒன்று. அவர்கள் ஒரு கேள்வியைக் கேட்டு முடிப்பதற்குள்ளேயே இவர் பதில் சொல்ல ஆரம்பித்து விட்டாராம்! இரண்டாவது. இவர் நாற்காலியிலே தாராளமாக Relax ஆக உட்காராமல். நாற்காலி முனையிலே உட்கார்ந்திருந்தாராம்!

இந்த இரண்டு விதமான செயற்பாடுகளும். இவர் அவசரப்படுகிறவர் பதற்றப்படுகிறவர் என்பதற்கான அடையாளங்களாம்! பார்க்கப் போகின்ற வேலைக்கு அவசரம், பதற்றம் இது இரண்டும் இருக்கக் கூடாதாம்.

அதனாலேயே மார்க் இருந்தும் சர்ட்டிபிகேட் இருந்தும் அந்த வேலை வாய்ப்பு அவருக்கு கிடைக்கவில்லை. வேலை கொடுக்கிறவர்கள் நம்மிடமிருந்து என்னதான் எதிர்பார்க்கப் போகிறார்கள் - என்பதை தெரிந்து வைப்பது நல்லது

அதை ஒவ்வொன்றாக பார்க்கலாம்.

முதலிலே - தொடர்பு கொள்ளும் திறமை. Ability to communicate. நீங்கள் நினைப்பதை அழகாக தொகுத்து வகைப்படுத்திச் சொல்லத் தெரியுதா என்று பார்ப்பார்கள்!"

உங்கள் திட்டங்களை அடுத்தவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய விதத்திலே வெளிப்படுத்த உங்களாலே முடியுதா என்று பார்ப்பார்கள். இதுக்கு என்ன செய்வது?

குழப்பமில்லாமல் சிந்திக்க வேண்டும்..! குழப்பமில்லாமல் பேசவேண்டும்.

இரண்டாவது விடயம் புத்திசாலித்தனம்... Intelligence பெற்றுக்கொள்ளப் போகும் வேலையை நல்ல விதமாக செய்ய முடியுமா உங்களாலே? அதை எந்தெந்த வழியிலே செய்யலாம் என்பதை உங்களாலே தீர்மானிக்க முடியுமா? அந்த வேலைக்கான புதுப்புது யோசனைகளை உங்களாலே சொல்ல முடியுமா? என்று பார்ப்பார்கள்.

மூன்றாவது தன்னம்பிக்கை. self confidence. உங்களுக்கு இருக்கா என்று பார்ப்பார்கள்.

எந்தச் சூழ்நிலையையும் சமாளிக்க வேண்டும். எப்படிப்பட்ட மனிதர்களையும் சமாளிக்கின்ற தைரியம் வேண்டும். அடுத்தவர்களை நமக்குச் சாதகமாக திருப்பக் கூடிய தன்னம்பிக்கை வேண்டும்!

நாலாவது பொறுப்புக்களை முன்வந்து ஏற்றுக்கொள்வார்கள். Willingness to accept responsibility.

பொறுப்புகளிலேயிருந்து நழுவிப் போக ஆசைப்படாமல் செய்து முடிக்க வேண்டும்.

ஐந்தாவது - முன்வருதல் - Initiative. வேலையோட முக்கியத்துவம் உணர்ந்து அதற்குத் தகுந்த நடவடிக்கைகளை தயங்காமல் எடுக்க முன் வர வேண்டும்.

ஆறாவது - தலைமைத்துவம் - Leadership

நாலுபேருக்குத் தலைமைதாங்கி நடந்துக்கத் தெரியுதா? நல்லவிதத்திலே. ஏழாவது - கற்பனைத்திறன் - Imagination. சில பிரச்சினைகள் வரக்கூடும் என்று முன்கூட்டியே யூகித்து தகுந்த நடவடிக்கை எடுக்கின்ற திறமை உண்டா என்று பார்ப்பார்கள்.

எட்டாவது - வளைந்து கொடுத்தல்-Flexibility. சூழ்நிலைக்குத் தகுந்த மாதிரி... மாற்றங்களுக்குத் தகுந்தமாதிரி அனுசரிச்சு நடந்துக்கத் தெரியுதா என்று பார்ப்பார்கள். அடுத்தது - திறமைகளை வெளிக்கொணரும் திறமை Interpersonal Skills.

அடுத்தவர்களிடம் இருக்கின்ற திறமையைக் கண்டுபிடித்து அதை நல்ல விதத்திலே ஊக்கப்படுத்தி பயன்படுத்தத் தெரியுமா என்று பார்ப்பார்கள். அடுத்தது Self Knowledge....

அடுத்தவர்கள் நம்மைப்பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதை நம்மாலே புரிந்துகொள்ள முடியாது என்பது முக்கியம்.

அடுத்தது - போட்டி மனப்பான்மை - Competitiveness.

அடுத்தவர்களை ஒப்பிட்டுப்பார்த்து அதைவிட ஒரு படி மேலே வரணும் என்கின்ற குணம் வேண்டும். அடுத்தது - குறிக்கோளை வெல்லுதல் - Goal Achievement குறிக்கோளை அடைய வேண்டும். சவாலாக எடுத்துக் கொண்டு அதை அப்புறம் - வேறுபட்ட திறமைகள் - Vocational Skills பதவிக்கு வேண்டிய திறமைகள் தவிர மற்றைய திறமைகள் ஏதும் உண்டா என்பதும் முக்கியம்.

நமக்கு வேலை கொடுக்க வேண்டும் என்று நினைக்கின்றவர்கள் நம்மிடமிருந்து இவ்வளவும் எதிர்பார்ப்பார்கள். அதுக்குத் தகுந்தமாதிரி நம்மை நாமே தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

எனக்கு வேண்டப்பட்ட ஒருவர் ஒரு இன்டர்வியூக்குப் போய்விட்டு வந்தார். "எப்படி இருந்தது இன்டர்வியூ?" என்று விசாரித்தேன்.

"நான் போனேன்.. அவர் கேட்ட எல்லா கேள்விக்கும்... அவர் எதிர்பார்த்தது மாதிரியே எல்லா பதிலையும் சொன்னேன். கடைசியாக நான் எதிர்பார்க்காத ஒரு தகவலை அவர் சொன்னார்" என்றார். "என்ன" என்று கேட்டேன். "அவரும் என்னை மாதிரியே இன்டர்வியூக்கு வந்தவர் தானாம். சும்மா என்னை கேள்வி கேட்டுக்கிட்டிருந்தாராம்!" என்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர்களை கட்டுப்படுத்த முடியவில்லையெனில் பொறுப்பை மீனவர்களிடம் ஒப்படையுங்கள்

## ரவிகரன் எம்.பி வலியுறுத்து

(மன்னார்)

**தற்போது வடபகுதி கடற்பரப்பில் அதிகரித்துள்ள இந்திய மீனவர்களின் அத்துமீறலையும், சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளையும் கடற்படையால் கட்டுப்படுத்த முடியவில்லையெனில், அந்தப் பொறுப்புக்களை ஒரு மாதகாலத்திற்கு வடபகுதி மீனவர்களிடம் ஒப்படைக்குமாறு வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.**



மன்னார் - முசலி பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகையினைத் தடுக்கவேண்டிய கடற்படையினரும், ஆட்சியாளர்களும் தொடர்ச்சியாக காரணங்களை மாத்திரம் சொல்கின்ற நிலையே காணப்படுகிறது.

அத்தோடு கடற்படையினர் இந்திய மீனவர்களின் இந்த அத்துமீறலைத் தடுப்பதற்கு டோறா படகுகள் வேண்டுமென காரணங்களை இங்கு கூறிக் கொண்டிருக்கமுடியாது.

இந்திய மீனவர்களுடைய இத்தகைய அத்துமீறிய செயற்பாடுகளுக்கு இந்திய அரசும், இலங்கை அரசும் ஆதரவளிப்பதாகவே எம்மால் பார்க்க முடிகிறது.

இந்த விடயத்தில் கடற்படையினர் மீது மீனவ மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர்.

கடற்படையினரால் இந்திய மீனவர்களின் அத்துமீறிய செயற்பாட்டைக் கட்டுப்படுத்த முடியவில்லையெனில் இந்திய மீனவர்களைக் கட்டுப்படுத்தும் பொறுப்பையும், சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் பொறுப்பையும் எமது மீனவ மக்களிடம் ஒரு மாதத்திற்கு ஒப்படையுங்கள் என்றார். (8)

# ஒன்றிணைந்து குரல் கொடுத்து உறவுகளை சிறை மீட்போம் வாருங்கள்!

## குரலற்றவர்களின் குரல் அமைப்பு, அழைப்பு

(யாழ்ப்பாணம்)

கறுப்பு ஜூலை "பொது நினைவேந்தலும்- விடுதலைக்கான போராட்டமும்", "குரலற்றவர்களின் குரல்" அமைப்பினால் யாழ்ப்பாணம் கிட்டுப் பூங்காவில் எதிர்வரும் 24ஆம் மற்றும் 25ஆம் திகதிகளில் முன்னெடுக்கப்படவுள்ளது.

இது தொடர்பில், குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பபாளர் மு.கோமகன் யாழ் . ஊடக அமையத்தில் நேற்றுப் புதன்கிழமை நடத்திய ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கையில், இது வரை காலமும் இலங்கையின் கொடூர சிறைக்கூடங்களுக்குள் நயவஞ்சகமாக படுகொலை செய்யப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளுக்கான நீதி நியாயத்தை கோருகின்ற "பொது நினைவேந்தலும்" 30 ஆண்டுகள் கடந்தும் விடுதலையின்றி சிறைகளுக்குள் வாடிக்கொண்டிருக்கின்ற தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்திய நூதன கவனயீர்ப்புப் போராட்டமும் மக்களது ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்படவுள்ளது.

இவ்வாறான அறப் பணிகளை தொடர்ந்து தொடர்ச்சியாக மேற்கொள்ளும் பட்சத்திலேயே, சமூகத்தின் பெயரில் சிறைவாடும் எமது உறவுகளான "தமிழ் அரசியல் கைதிகளுக்கு" நீதி நியாயமும் விடுதலையும் கிடைக்கப் பெறும் எனும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

மனிதநேயம் கொண்ட நல்லுள்ளங்கள் ஒருங்கிணைந்து முன்னெடுப்புகளை மேலும் வலுப்படுத்தக்கூடிய வகையிலான உதவிகளை, "விடுதலைக்கான திறவுகோல் களை கனதியாக்குவோம்" என்கின்ற "உண்டியல் திட்டத்தின் ஊடாக" மனமுவந்து நல்க வேண்டுமென அன்புரிமையோடு வேண்டி நிற்கின்றோம்.

இந்தப் பொதுவெளி கவன யீஈர்ப்புப் போராட்டத்தில், இன மத மொழி கடந்து, வயது,பால் வேறுபாடின்றி, கட்சி பேதங்களுக்கு அப்பால் ஒன்றிணைவோம். சமூகநீதி, சமூகநியாயத்துவம், விடுதலைப் பயணம் நோக்கிய செயற்பாடுகளை பலப்படுத்தி முன்நகர்வோம்.

நல்லெண்ணமும் கருணை உள்ளமும் கொண்ட அனைவரும் சிரமம் பாராது வந்து கலந்து கொள்வதன் மூலமே, இலங்கை அரசிற்கும் சர்வதேசத்திற்கும் ஒரு திரட்சிமிகு அழுத்தத்தை கொடுத்து அன்புக்குரிய எமது சிறையுறவுகளை உயிர்ப்புடன் விடுவிக்க முடியும்.

அனைவரும் "ஒன்றிணைந்து குரல் கொடுத்து உறவுகளை சிறை மீட்போம் வாருங்கள்..! " என "குரலற்றவர்களின் குரல்" அமைப்பினராகிய நாம் எமது மக்களை நோக்கி உரிமையோடு அழைப்பு விடுக்கின்றோம் என தெரிவித்தார். (8-33)


# INVITATION FOR BIDS /05
# PUTHUKKUDIYIRUPPU PRADESHIYA SABHA

1. The **Chairman**, Divisional Procurement Committee on behalf of the **Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road, Puthukkudiyiruppu** invites sealed bids from eligible and qualified bidders for the works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below. **"Bidders shall also register themselves with the Registrar of Public Contracts Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987 for the contracts exceed Rs.5 million,"**
4. Qualification' requirements are indicated in section 4 of the Procurement Document. Additional details are provided in the Section 5 of the Procurement Document.
5. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the bidding documents at the same place on any working days from during the document issuing period mentioned in table below between 09:00 hrs and 15:00 hrs.

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Document Issuing/Purchasing Period | | | From 17.07.2025 until 29.07.2025 | | | | | |
| | | Pre-Bid Conference | | | At 10.30 A.M on 24.07.2025 | | | | | |
| | | Closing and Opening of Bids | | | At 10.30 A.M on 30.07.2025 | | | | | |
| S/No | Bid ID | Description of Work | Source of Fund | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Required CIDA Grade & Speciality | Non-Refundable Fee (Rs.) | Bid Validity Period upto | Required Bid Security Amount (Rs.) | Required Bid Security Validity Period |
| 01 | PSDG/NP/MU/PTKPS/2025/WM/01 | Construction of Waste Collecting Center at Oddusudddan- | PSDG | 1.27 | 63 | C9 or Above (Building) | 2,000.00 | 16-Sep-2025 | 13,000.00 | 14-Oct-2025 |
| 02 | PSDG/NP/MU/PTKPS/2025/WM/02 | Construction of Waste Collecting Center at Thirumurukandy | PSDG | 1.27 | 63 | C9 or Above (Building) | 2,000.00 | 16-Sep-2025 | 13,000.00 | 14-Oct-2025 |
| 03 | PSDG/NP/MU/PTKPS/2025/WM/03 | Construction of Waste Collecting Center at Olumadu | PSDG | 1.10 | 63 | C9 or Above (Building) | 2,000.00 | 16-Sep-2025 | 13,000.00 | 14-Oct-2025 |
| 04 | PSDG/NP/MU/PTKPS/2025/WM/04 | Construction of Waste Collecting Center at Puthukkudiyiruppu | PSDG | 1.27 | 63 | C9 or Above (Building) | 2,000.00 | 16-Sep-2025 | 13,000.00 | 14-Oct-2025 |
| 05 | PSDG/NP/MU/PTKPS/2025/BUS HALTS/01 | Renovation of Bus halts at Puthukkudiyiruppu Pradeshiya Sabha Area. | PSDG | 0.809 | 63 | C9 or Above (Building) | 2,000.00 | 16-Sep-2025 | 10,000.00 | 14-Oct-2025 |

6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Secretary, Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road, Puthukkudiyiruppu (T.P:0212291023, email: pkipsmullai@gmail.com) **from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table above upon payment of non-refundable fees as mentioned in the table.** The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) must be delivered to the Chairman, Divisional Procurement Committee, Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road, Puthukkudiyiruppu **on or before** 10.30 A.M **as stated in table above.** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend at Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road, Puthukkudiyiruppu.
8. Pre-Bid Conference will be held at Conference Hall, Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road, Puthukkudiyiruppu **commencing at** 10.30 AM **as stated in table above.**
9. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Tables.

**Chairman**
**Divisional Procurement Committee,**
**Puthukkudiyiruppu Pradeshiya Sabha,**
**Paranthan Road,**
**Puthukkudiyiruppu.**

**17.07.2025**

(C-3430)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 823



பழுவூர் ராணியைப் பற்றி யாரேனும் அவதூறு கூற முற்பட்டால், அவனை அந்தக் கணமே என் வாளுக்கு இரையாக்குவேன்! இது சத்தியம்!" என்று சொன்னான்.

கந்தமாறன் பின்னால் ஓர் அடி வந்து நின்று, "என் கையில் கத்தி எடுக்க வேண்டிய அவசியமே இல்லை, பழுவூர் இளையராணியைப் பற்றி அவதூறு கூறுகிறவனை என் கையினாலேயே கழுத்தை நெரித்துக் கொன்று விடுவேன் இது சத்தியம்!" என்றான்.

இதைக் கேட்ட வந்தியத்தேவனும் ஒரு அடி முன் வந்து "நானும் அப்படித்தான்! பழுவூர் ராணியைப் பற்றி யாரேனும் தவறாகப் பேசினால், என் கண்பார்வையினாலேயே அவனைச் சுட்டெரித்து விடுவேன்!" என்றான்.

"ஆஹாஹா! கொஞ்சம் பொறுங்கள் நண்பர்களே! என்னிடமே சண்டைக்கு வந்து விடுவீர்கள் போலிருக்கிறதே! பார்த்தீர்களா, தாத்தா! தமிழ்ப் பெண் குலத்தின் கௌரவத்தைக் காப்பாற்றுவதில் இவர்கள் எவ்வளவு துடிப்புடன் இருக்கிறார்கள்! ஆனால் பழுவூர் இளையராணியைப்பற்றி யாரும் அவதூறு சொல்லவில்லை. சொன்னால், நானும் கேட்டுக் கொண்டு சும்மா இருக்க மாட்டேன். இந்த வீராதி வீரர்கள் வரும் வரையில் அப்படி அவதூறு சொன்னவனை நான் உயிரோடு வைத்திருக்க மாட்டேன்.

பழுவூர் இளையராணியின் மூடுபல்லக்கைப் பற்றித்தான் குறை சொல்லுகிறார்கள்! அந்தக் கோழை மதுராந்தகன் பழுவூர் ராணியின் மூடுபல்லக்கில் ஊர் ஊராக இரகசியப் பிரயாணம் செய்கிறானாம்! எப்போது ஆண் மகன் ஒருவன் மூடுபல்லக்கில் இரண்டு பக்கத்திலும் திரை விட்டுக் கொண்டு பிரயாணம் செய்கிறானோ, அப்போது இளையராணியும் அப்படி பிரயாணம் செய்தால், சில அனர்த்தங்கள் விளையக் கூடும் அல்லவா?"

"கோமகனே! பராந்தக சக்கரவர்த்தியின் பேரனும் கண்டராதித்தருடைய திருமகனுமான மதுராந்தகத் தேவர் எதற்காக மூடுபல்லக்கில் பிரயாணம் செய்ய வேண்டுமாம்? எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே?" என்றான் பார்த்திபேந்திர பல்லவன்.

"அதன் காரணமும் ஒரு வேடிக்கையான காரணந்தான்! மதுராந்தகன் மூடுபல்லக்கில் ஏறிக் கொண்டு ஊர் ஊராகப் போய்த் தன் கட்சிக்குப் பலம் திரட்டிக் கொண்டு வருகிறானாம்!"

"எதற்காகப் பலம் திரட்டுகிறது?" "எதற்காகவா? என் தகப்பனாருக்குப் பிறகு சோழ ராஜ்ய சிம்மாசனத்தில் அவன் ஏறுவதற்காகத்தான்! எப்படியிருக்கிறது கதை? சில மாதங்களுக்கு முன்பு ஒரு நாள் இந்தக் கடம்பூர் மாளிகைக்குக் கூட அவன் அப்படி மூடுபல்லக்கில் இரகசியமாக வந்திருந்தானாம். நள்ளிரவில் சதியாலோசனைக் கூட்டம் ஒன்று இங்கே நடந்ததாம். பார்த்திபேந்திரா! திருக்கோவலூர்க் கிழவனார் நீயும் என்னுடன் இருந்த போதுதானே இதையெல்லாம் சொன்னார்? மதுராந்தகனுக்குச் சிம்மாசனம் ஏறுவதற்கு உள்ள ஆர்வத்தினால் அவசரப்பட்டு என் தந்தையைக் கொஞ்சம் சீக்கிரமாகவே சொர்க்கத்துக்கு அனுப்பினாலும் அனுப்பி விடுவான் என்று சொன்னாரே? அதெல்லாம் உனக்கு நினைவில்லையா?"

"நினைவுக்கு வருகிறது, இளவரசே! அதையெல்லாம் அப்போதும் நான் நம்பவில்லை இப்போதோ, சிறிது கூட நம்பவில்லை. தஞ்சாவூருக்குப் போய் தங்கள் தந்தையை நேரில் தரிசித்துவிட்டு வந்த பிறகு."

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## மன்னர் தேவை



(நேற்றைய தொடர்ச்சி)

வேடிக்கை என்னவென்றால் அந்த வைத்திய பெண்ணிற்கும் அதே நேரத்தில் ஒரு ஆண் மகன் பிறந்தான். இரு பெண்களின் பிரசவத்தையும் அந்த பெண் பிரமாதமாய் கையாண்டு இரண்டு குழந்தைகளையும் எடுத்து கொடுத்தாள்.

ஆனால் மந்திரியாரே என்று இழுக்கவும், என்ன மன்னா? இவனின் பிறந்த நேரத்தையும், இவனையும் ஒத்து பார்த்த நம் ஜோசியர் இவனுக்கு எதிர்காலத்தில் மருத்துவத்தில் நிபுணனாகக்கூடிய தகுதி இருக்கிறது, ஆனால் மன்னனாக கூடிய தகுதி இருக்காது என்று சொல்லிவிட்டார். நான் இதுவரை யாரிடமும் சொல்லவில்லை.

காரணம் இவனுக்கு ஆட்சி புரிய ஆசை இல்லை என்றால் நாட்டில் குழப்பமும், தொல்லையும் வரும் என்றுதான் பேசாமல் இருந்துவிட்டேன். அதன்படியே இப்பொழுது அடுத்து யார் என்று குழப்பம் வந்து விட்டது.

சிறிது நேரம் யோசித்து கொண்டே இருந்த மந்திரியார், மன்னா தங்களிடம் ஒரு கேள்வி, நீங்கள் இளவரசனை பெற்றெடுத்தது எந்த ஊர்? என்று கேட்டார். மன்னர் சாமளாபுரம் என்று சொன்னார். மந்திரியார் நான் வருகிறேன் மன்னா என்று அவசரமாய் விடை பெற்றார்.

ஒரு நாள் கழித்து மீண்டும் மன்னரைப் பார்க்க வந்தார். கூடவே ஒரு இளைஞனையும் அழைத்து வந்தார். மன்னா இந்த சிறுவனை நன்றாக பாருங்கள் என்று சொன்னார். மன்னர் சிறிது நேரம் உற்று பார்த்து ஒன்றும் புரியவில்லை மந்திரியாரே என்று சொன்னார்.

ஒரு நிமிடம் மன்னா, என்று அவரிடம் அனுமதி கேட்டு விட்டு அந்த இளைஞனை நீங்கள் முன்னறையில் ஒய்வெடுங்கள், மன்னரிடம் பேசி விட்டு வந்து விடுகிறேன் என்று சொல்லி அவரை அனுப்பி விட்டு மீண்டும் மன்னரை காண வந்தார்.

மன்னா என்னுடன் வந்த இளைஞனை நன்றாக பார்த்தீர்கள் அல்லவா? உங்களுக்கு ஏதேனும் வித்தியாசம் தெரிகிறதா? என்று கேட்டார், மன்னர் நான் உடல் நலம் இல்லாமல் இருப்பதால் என்னால் சரியாக கவனிக்க முடியவில்லை என்று சொல்லிவிட்டு, ஏன் இப்படி கேட்கிறீர்கள் என்று கேட்டார்.

மன்னா உங்களுக்கு அடுத்து இந்த இளைஞனுக்குத்தான் ஆட்சியை கொடுக்கலாம் என்று நினைக்கிறேன் அமைதியாக சொன்னார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலிமையும் வீரமும் மிக்கவர்களின் ஆயுதம் அகிம்சை. – மகாத்மா காந்தி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## புனித தீர்த்தக்கரையாக கீரிமலையை ஆக்குங்கள்

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த இந்திய தேச பிதா மகாத்மா காந்தி கீரிமலைக்கும் சென்றிருந்தார்.

கீரிமலைக்குச் சென்ற காந்தியடிகள் அங்கு பலரும் பிதிர்க்கடன் செய்வதைப் பார்த்து வியந்தார்.

தன்னை அழைத்து வந்தவர்களிடம், கீரிமலை தீர்த்த மகிமையைக் கேட்டறிந்தார்.

அன்று கீரிமலை புனித தீர்த்தத்தின் மகிமையை அறிந்த காந்தியடிகள்; தனது அஸ்தியின் ஒரு பகுதி கீரிமலைக் கடலில் கரைக்கப்பட வேண்டும் என முடிவு செய்தார்.

அன்று காந்தியடிகள் கொண்ட விருப்பம் காரணமாக மகாத்மா காந்தியடிகளின் அஸ்தியின் ஒரு பகுதி யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்பட்டு அந்த அஸ்தி கீரிமலை புனித கடல் தீர்த்தத்தில் கரைக்கப்பட்டது.

இந்தத் தகவலை சொற்பொழிவொன்றில் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் கூறியதைக் கேட்டபோது, உண்மையிலேயே பிரமிப்படைந்தோம்.

இந்திய தேசத்திலுள்ள கங்கை, யமுனை, காவேரி என்ற புனித தீர்த்தங்களை நினைக்கின்ற நமக்கு அண்ணல் காந்தியடிகள்; உங்களிடம் இருக்கின்ற கீரிமலை கடல் தீர்த்தம் மிகவும் புனிதமானது.

அந்தப் புனிதமான தீர்த்தத்தில் என் அஸ்தி கரைய வேண்டும் என நான் விரும்புகிறேன் என்ற செய்தியை நமக்குத் தந்துள்ளார்.

ஆம், கீரிமலை புனித கடல் தீர்த்தத்தில் அண்ணல் காந்தியடிகளின் அஸ்தி கரைக்கப்பட்டது என்ற செய்தி ஒன்றுபோதும், கீரிமலை தீர்த்தக்கரையை புனிதமாகவும் பிதிர்க்கடன் செய்வதற்கான அனைத்து வசதிகளும் கொண்ட இடமாகவும் ஆக்குவதற்கு.

ஆம், எதிர்வரும் 24 ஆம் திகதி ஆடி அமாவாசை விரத நாள். ஆயிரக்கணக்கானவர்கள் பிதிர்க்கடன் செய்யும்பொருட்டு கீரிமலை புனித தீர்த்தக்கரைக்கு வருவார்கள்.

பிதிர்க்கடன் என்பது எம் மகிழ்வான வாழ்வுக்கு மிகவும் அவசியமானது.

பிதிர்கள் என்போர் நம் முன்னவர்கள். அவர்களின் ஆசி நமக்கு மிகவும் அவசியமானது.

ஆகையால் பிதிர்க்கடனை ஒரு கடன் கழிப்புப்போல செய்யாமல், மனம் திருப்தியடையும் வகையில் பிதிர்க்கடனைச் செய்ய வேண்டும்.

ஆகவே ஆடி அமாவாசைக்கு முன்னதாக, கீரிமலை புனித தீர்த்தக்கரையை சுத்தப்படுத்தி அங்கு தர்ப்பணம் செய்பவர்கள் இட்டல் இடைஞ்சல் இன்றி கடலில் இறங்கி நீராடுவதற்கு ஏற்ற வசதிகளை முடிந்தளவில் செய்து கொடுக்க வேண்டும்.

அப்போதுதான் எங்கள் நம்பிக்கைகளும் பிதிர்க்கடன் செய்கின்ற பண்பாடுகளும் வலுப்பெறும். தொடர்ந்தும் பின்பற்றப்படும்.

# எதிர்க்கட்சிகளை முடக்குவதற்கு அநுர அரசாங்கம் தீவிர கவனம்

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

(கொழும்பு)

எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்துள்ளதால் எதிர்க்கட்சிகளை முடக்குவதற்கு அநுர அரசாங்கம் தீவிர அவதானம் செலுத்தியுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்புக் கோட்டை நீதவான் நீதிமன்றத்துக்கு நேற்றுப் புதன் கிழமை (16) வழக்கு விசாரணைக்காக சென்றதன் பின்னர் ஊடகங்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

திருடர்களைப் பிடிப்பதற்கும் ஊழல் மோசடிகளை இல்லாதொழிப்பதற்கும் நாங்கள் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. ஊழல் எதிர்ப்புக்கு நாங்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம்.

ஊழல் என்று குறிப்பிட்டுக் கொண்டு எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்களை அச்சுறுத்துவதாயின் அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்காகவே நாங்கள் ஒன்றிணைந்துள்ளோம்.

நீதிமன்றம் சுயாதீமான முறையில் செயற்படும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

ஊழல்வாதிகளைப் பிடிப்பதாக இந்த அரசாங்கம் தேர்தல் பிரசார மேடைகளில் குறிப்பிட்டது. பல பில்லியன் ரூபா மோசடி செய்தவர்கள் உள்ளார்கள். அந்த வழக்குகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.

வெளிநாடுகளில் பதுக்கி வைத்துள்ள சொத்துக்களை முடக்குவதாக குறிப்பிட்டார்கள். உகண்டாவில் இருந்து நிதியைக் கொண்டு வருவதாகக் குறிப்பிட்டார்கள்.

ஆனால் இன்று அவற்றை மறந்து விட்டு பிரதான எதிர்க்கட்சியை முடக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுகிறார்கள். பாராளுமன்றத்துக்குள்ளும் பாராளுமன்றத்துக்கு வெளியிலும் எதிர்க்கட்சிகளை அச்சுறுத்தும் செயற்பாடுகளை அரசாங்கம் பெரும்பான்மை பலத்தை வைத்துக் கொண்டு மேற்கொள்கிறது. அரசாங்கத்தின் முறைகேடான செயற்பாடுகளை வெளிப்படுத்தும் போது அந்த முறைகேடுகள் குறித்து ஆராயாமல் முறைப்பாடுகளை முன்வைக்கும் தரப்பினர் இன்று இலக்குப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

உள்ளூராட்சிமன்ற அதிகார சபைகளை ஸ்தாபிக்கும் போது கட்சியின் கொள்கை மற்றும் தீர்மானங்களுக்கு எதிராகச் செயற்பட்ட கட்சியின் உறுப்பினர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். மக்கள் விடுதலை முன்னணி மற்றும் தேசிய மக்கள் சக்திக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக ஒருபோதும் தீர்மானிக்கவில்லை.

எதிர்வரும் தேர்தலில் ஆட்சியை கைப்பற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள சந்தர்ப்பத்தில் எவ்வாறு நாங்கள் தேசிய மக்கள் சக்திக்கு ஒத்துழைப்பு வழங்குவோம். எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்துள்ளதால் எதிர்க்கட்சிகளை முடக்குவதற்கு அரசாங்கம் தீவிர அவதானம் செலுத்தியுள்ளது என்றார். (ம-7)

## அரசாங்கம் முன்னெடுக்கும் விசாரணைகளுக்குத் தயார்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

அரசாங்கம் முன்னெடுக்கும் விசாரணைகளுக்கு தயார் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் செயற்படுத்தப்பட்ட செவன மாதிரி கிராம வீட்டுத் திட்டத்தில் முறைகேடுகள் இடம்பெற்றிருப்பதாக தேசிய வீடமைப்பு அதிகாரசபை அறிக்கை சமர்ப்பித்துள்ளதாகவும், இந்த முறைகேடு குறித்து அமைச்சு மட்டத்தில் விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (15) நடைபெற்ற அமைச்சரவை ஊடகவியாளர் சந்திப்பின் போது குறிப்பிட்டார்.

இந்த விடயம் குறித்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரமதாஸ மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

அமைச்சராகப் பதவி வகித்த காலத்தில் துரிதகரமான வீடமைப்பு அபிவிருத்தி மற்றும் மதஸ்தலங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டன என்பதைக் குறிப்பிட வேண்டும். சட்டத்தின் பிரகாரமே நான் அபிவிருத்தி பணிகளை மேற்கொண்டேன். நாட்டுக்கான அபிவிருத்திப் பணிகளை செய்ததும் ஒரு குற்றமாக கருதும் தரப்பினர் இந்த நாட்டில் உள்ளார்கள். அரசாங்கத்திலும் உள்ளார்கள்.

நாட்டினதும், நாட்டு மக்களினதும் நலனுக்காகவே செயற்பட்டேன்.

கடந்த கால அரசாங்கங்களின் அனைத்து செயற்பாடுகளையும் முறையற்றது என்ற நிலைப்பாட்டில் இருந்து கொண்டு செயற்படுகிறது. நாட்டு மக்களின் அபிவிருத்திக்காக முன்னெடுக்கும் சகல திட்டங்களுக்கும் எதிர்க்கட்சி என்ற அடிப்படையில் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம் என்றார். (ம-7)

## அபிவிருத்திக் கூட்டத்துக்கு உழவு இயந்திரத்தில் சென்ற

### பிரதேச சபைத் தவிசாளர்கள்

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்துக்குச் செல்வதற்குத் தமக்கான வாகனம் இல்லாததால் அதனை வழங்கக் கோரி செங்கலடி மற்றும் வாழைச்சேனை பிரதேச சபையின் தவிசாளர்கள் செங்கலடியில் இருந்து கழிவு அகற்றும் உழவு இயந்திரத்தில் பிரதேச செயலகத்துக்குச் சென்று நேற்று (16) கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

செங்கலடி மற்றும் வாழைச்சேனை பிரதேச சபைகளின் தவிசாளர்களுக்கு வாகனங்கள் வழங்கப்பட்டிருந்தன. அந்த வாகனங்களை பிரதேச சபைகள் காலம் முடிவுற்று கலைக்கப்பட்டதையடுத்து பிரதேச செயலாளர்களின் நிர்வாகத்தின் கீழ் பிரதேச சபைகள் கொண்டுவரப்பட்டது.

இந்நிலையில் கிழக்கு மாகாண ஆளுநராகப் பதவியேற்ற புதிய ஆளுநர் பயன்படுத்தாத வாகனங்கள் தொடர்பாக அறியத்தரும்படி பிரதேச சபைகளுக்கு அறிவிக்கப்பட்டது. அதனையடுத்து வாகனங்கள் ஆளுநரிடம் ஒப்படைக்கப்பட்டன.

இதனையடுத்து உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் இடம்பெற்று பிரதேச சபைகளின் தவிசாளர்கள் நியமிக்கப்பட்டு பிரதேச சபை தவிசாளர்கள் ஆட்சியை பொறுப்பேற்றதையடுத்து மீண்டும் வாகனங்களைத் தேவைக்கேற்ப வழங்குவதற்கு ஆளுநர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இருந்தபோதும் பிரதேச சபை தவிசாளர்களுக்கான வாகனம் இல்லாததால் அவர்கள் தமது சேவையைச் செய்ய முடியாமல் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வந்துள்ளனர்.

எனவே பிரதேச சபைகளில் இருந்து எடுத்துச் சென்ற வாகனங்களை மீண்டும் வழங்குமாறு கோரி, செங்கலடி பிரதேச சபையின் தவிசாளர் முத்துப்பிள்ளை முரளீதரன் வாழைச்சேனை பிரதேச சபையின் சு.சுதாகரன் ஆகிய இரு பிரதேச சபைகளின் தவிசாளர்களும் நேற்று இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்திற்கு பங்கேற்பதற்காக செங்கலடி பிரதேச சபையின் கழிவு அகற்றும் உழவு இயந்திரத்தில் 16 கிலோ மீற்றர் தூரம் பயணித்து மட்டக்களப்பு கச்சேரியைச் சென்றடைந்தனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொசாட் 15

சொக்கன்

மொசாட் ஏஜென்ட்கள் பதறவில்லை. மெல்ல அக்கம்பக்கத்தில் விசாரிக்க ஆரம்பித்தார்கள். கொஞ்சம் கொஞ்சமாக நூலைப் பிடித்துக்கொண்டு போய் ரிகார்டோ க்ளெமென்டின் புதிய முகவரியைக் கண்டு பிடித்துவிட்டார்கள்.

அதன்பிறகு வழக்கமான கண்காணிப்புப் பணிகள் தொடங்கின. ரிகாட்டோ க்ளெமென்டின் நிழல் போல ஏஜென்ட்கள் பின்தொடர்ந்து தகவல் திரட்டினார்கள். அவருடைய குத்துமதிப்பான உயரம், எடை, தோற்றம், மற்ற விவரங்களெல்லாம் சேகரிக்கப்பட்டன. நிறையப் புகைப் படங்களையும் எடுத்தார்கள்.

இந்த ஏஜென்ட்கள் அனுப்பிவைத்த தகவல்கள் அனைத்தையும் மொசாட் மேலிடம் அடால்ப் ஐக்மெனுடன் ஒப்பிட்டுப் பார்த்தது. இதன் அடிப்படையில் ரிகார்டோ க்ளெமென்ட் தான் அடால்ஃப் ஐக்மென் என்கிற முடிவுக்கு அவர்கள் வந்தார்கள்.


ஆனால் இதை எப்படி உறுதிப்படுத்திக் கொள்வது? சரியாகத் தெரியாமல் யாரையோ கைது செய்து இஸ்ரேலுக்குக் கொண்டு சென்றுவிட்டால் மொசாட்டுக்குப் பெரிய அவமானம் இல்லையா?

1960 மார்ச் 21 ஆம் திகதி அலுவலகம் முடிந்து வீடு திரும்பிய ரிகார்டோ க்ளெமென்ட் கையில் ஒரு பூங்கொத்து. அதைத் தன்னுடைய மனைவிக்குக் கொடுத்தார். அவர் வீட்டில் எல்லோர் முகத்திலும் ஏகப்பட்ட சிரிப்பு சந்தேஷம்.

இதைக் கவனித்த மொசாட் ஏஜென்ட்கள் சட்டென்று ஐக்மென் ஃபைலைப் பிரித்தார்கள் பரபரப்பாகத் தேடினார்கள்.

மார்ச் 21 அடால்ஃப் ஐக்மென் திருமண நாள்!

இந்த ஆதாரம் போதுமே ரிகார்டோ க்ளெமென்ட் என்கிற அடால்ஃப் ஐக்மெனைக் கடத்த நாள் குறித்துவிட்டது மொசாட்.



## உடும்புப் பிடி

ரஃபி எய்டன் கடிகாரத்தைப் பார்த்தார் மணி 8.05 இன்னும் கொஞ்ச நேரம்தான்.

அந்தத் தெரு நன்றாக இருட்டியிருந்தது. அக்கம்பக்கத்தில் வீடுகள் மக்கள் நடமாட்டம் எதுவும் இல்லை.

ரஃபி உட்கார்ந்திருந்த கார் மிக மெதுவாக ஊர்ந்துகொண்டிருந்தது. தெருவில் இந்த மூலைக்கும் அந்த மூலைக்குமாக மாறி மாறி கல்யாண ஊர்வலம்.

தெருமுனையில் ஒரு பஸ் ஸ்டாப். அந்தக் காரில் இருந்த எல்லோரும் அங்கே ஒரு கண்ணைப் பதித்து வைத்திருந்தார்கள்.

சில நிமிடங்கள் கழித்து தூரத்தில் இரண்டு வெளிச்சப் பொட்டுகள் தெரிந்தன. அவை கொஞ்சம் கொஞ்சமாகப் பெரிதானதும் ஒரு பஸ் வருவது புரிந்தது.

சட்டென்று ரஃபி எய்டனின் உடல் சிலிர்த்துக் கொண்டது. வந்து நின்ற பஸ்ஸிலிருந்து இறங்குகிறவர்கள் ஒவ்வொருவரையும் கூர்ந்து கவனிக்க ஆரம்பித்தார்.

ம்ஹீம் இந்த பஸ்ஸிலும் ஐக்மென் இல்லை!

என்ன ஆச்சு? வழக்கமாக இந்த நேரத்துக்கு வீடு திரும்பிவிடுவாரே இன்றைக்கு ஏன் லேட்?

ஒருவேளை விடயம் வெளியே கசிந்திருக்குமோ? யாராவது ஐக்மேனை உஷார்ப்படுத்தித் தப்பிக்கவைத்து விட்டார்களா?

ம்ஹீம் சான்ஸே இல்லை இந்தக் கடத்தல் விவகாரத்தில் மொசாட் மிகக் கவனமாகக் காய்களை நகர்த்தியிருந்தது. வெளியாட்கள் யாருக்கும் திட்டம் தெரிந்துவிடாதபடி கச்சிதமாக வேலைகள் நடந்திருந்தன.

பத்து நாள் முன்பாக தான் ரஃபி எய்டன் அவருடைய சிறப்புக் குழுவினர் ப்யூனஸ் ஐரிஸ் வந்து இறங்கியிருந்தார்கள். யார்மீதும் துளி இஸ்ரேல் வாசம் கூட அடித்துவிடாதபடி பொய் வேடம் போட்டு அனுப்பியிருந்தது மொசாட்.

ரஃபி எய்டன் குழுவினர் வருவதற்கு முன்பாகவே இந்தக் கடத்தல் திட்டத்துக்காக நகரின் வெவ்வேறு பகுதிகளில் ஏழு வீடுகள் வளைத்துப்போடப்பட்டிருந்தன. கூடவே ஒரு டஜன் கார்களும்.

ஒற்றை ஆளைக் கடத்துவதற்கு இத்தனை வீடுகள், இத்தனை கார்கள் எதற்கு?

அடால்ஃப் ஐக்மென் இப்போது இஸ்ரேலில் இருந்தால் பிரச்சினையே இல்லை மொசாட் ஏஜென்ட்கள் ஷேர் ஆட்டோவில் கூடப் புறப்பட்டுப்போய்க் கோழி அமுக்குவதுபோல் அள்ளிக் கொண்டுவந்து விடலாம். ஒரு பயல் கேள்வி கேட்கமுடியாது.

ஆனால் இது வெளிநாடு அதுவும் ஹிட்லரின் முன்னாள் கூட்டாளிகள் நாஜிக்களுக்கு ஆதரவு தரக்கூடிய நாடு. இங்கே ஓர் அன்னிய உளவுத்துறை ஐக்மென்மேல் கை வைக்கிறது என்று தெரிந்தால் ரஃபி எய்டனும் மற்ற மொசாட் ஏஜென்ட்களும் வாழ்நாள் முழுக்க ஜெயிலில் களி தின்னவேண்டியது தான் எல்லை மீறிய சில்மிஷம் என்று சொல்லி எல்லோரையும் தூக்கில் போட்டால் கூட ஆச்சர்யப்படுவதற்கில்லை.

அதனால் தான் மொசாட் இந்த விடயத்தில் ரிஸ்கே எடுக்கவில்லை. ஏழெட்டு வீடுகள், பத்துப் பன்னிரண்டு கார்கள் என்று பிடித்துப் போட்டால் கடத்தலுக்கு ரொம்ப வசதி ஒரு வீட்டில் ஏதாவது பிரச்சினையாகி பொலிஸ் ரெய்ட் வந்தால்கூட சட்டென்று தப்பிக்கலாம். ஐக்மெனை வேறு எங்கேயாவது ஒளித்து வைக்கலாம்.

ஒருவேளை அர்ஜென்டினா பொலிஸ்காரர்கள் ஓவர்டைமில் வேலை செய்த எல்லா மொசாட் வீடுகளையும் சுற்றி வளைத்துவிட்டால்?

நோ ப்ராப்ளம் என்றார் ரஃபி எய்டன். அப்படி ஒரு நிலைமை வந்தா ஐக்மெனை நானே என் கையால் கழுத்தை நெரித்துக் கொன்று விடுவேன் அறுபது லட்சம் யூதர்களைக் கொன்ற அந்த அயோக்கியனுக்காக நான் ஒருத்தன் தூக்கு மேடைக்குப் போனாப் பரவா யில்லை.

ரஃபி எய்டன் முன்னாள் இராணுவ வீரர் அங்கேயும் அவர் துப்பாக்கி தூக்கிச் சண்டை போட்டதை விட இரகசிய உளவுப் பணிகளில் ஈடுபட்டு எதிரிகளுக்கு வேட்டு வைத்ததுதான் அதிகம்.

இஸ்ரேல் தேசம் உருவானபிறகு அதன் உளவுத்துறைக்கு நிறைய திறமைசாலி இளைஞர்கள் தேவைப்பட்டார்கள். அப்படி இழுக்கப்பட்டவர் தான் ரஃபி எய்டன்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒருங்கிணைப்புக்...

கூடத்தில் கடற்தொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரும் யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப் புக்குழுத் தலைவருமான இராமலிங் கம் சந்திரசேகரின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இணைத் தலைவராக வடக்கு ஆளுநர் நா.வேதநாயகன் பங்கேற் பார். (ம-7)

## கிளிநொச்சியில்...

உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கோரிக்கை முன்வைத்தார்.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செய லகத்தில் நேற்று நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், மாவட்டத்தில் நீண்ட காலமாக மக்கள் பயன்படுத்திய பயிர் செய்து வந்த ஏராளமான காணிகள் படை யினரின் கட்டுப்பாட்டிலும் வனவள திணைக்களத்தினாலும் ஆக்கிரமிக் கப்பட்டுள்ளது.

குறிப்பாக ஆனைவிழுந்தான் குளத்தின் கீழான வயல் காணிகள் பள்ளிக்குடா போன்ற பகுதிகளில் அங்கே மக்கள் பயிர்ச்செய்கை மேற் கொண்டதற்கான கட்டுமானங்கள் இருக்கின்றன.

கிளிநொச்சி நகரத்தில் உள்ள நாற்பது வீதமான காணிகள் முழுக்க முழுக்க படையினரின் கட்டுப்பாட் டில் இருந்து வருகின்றது.

யுத்தம் நிறைவுபெற்று 14 ஆண்டு கள் கடந்துள்ளன. யாரும் ஆயுதம் தூக்கவில்லை, யாரும்போராட வில்லை. ஆனால் இராணுவம் இவ்வாறு காணி களை ஆக்கிரமித்து வைத்திருப்பது என்பது ஏற்றுக்கொள்ள முடியாது.

குறிப்பாக கிளிநொச்சி மகா வித்தி யாலய மைதானத்திற்குச் செல்லும் பாதை மற்றும் மகா வித்தியாலயத்துக் குரிய காணி, பிரதேச சபைக்கான நூலகக் காணி, தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் காணி. இவ்வாறு பெருந்தொகையான காணிகளை நகரத்தின் மையப்பகுதிகளில் இரா ணுவத்தினர் வைத்துள்ளனர்.

இதனால் அபிவிருத்தியோ அல் லது நல்லிணக்கமோ நடைபெறாது என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை இது தொடர்பில் ஊட கங்களுக்குக் கருத்துத் தெரிவித்த கடற்தொழில் அமைச்சர் இ.சந்திர சேகர் பாடசாலைக்குரிய காணி மற்றும் பாதைகளை திறந்துவிடுவது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சுடன் பேசி அதற்கான தீர்வு எட்டப்படும் என்றும் தெரிவித்திருந்தமை குறிப் பிடத்தக்கது. (ம-7,315)

## யாழ்.மாநகர...

வர் மதிவதனி விவேகானந்தராஜா தலைமையில் நேற்றுக் காலை மாநகர சபை சபா மண்டபத்தில் நடைபெற் றது.

மாநகர சபை உறுப்பினர்களி டையே விவாதம் நடைபெற்ற நிலை யில் சபை அமர்வில் பங்கேற்ற மாநகர சபை உறுப்பினர் இரத்தினம் சதீஸ் வெளியே வந்து பார்வையாளர் பகுதியில் இருந்து மாநகர சபை அமர்வை முகநூல் ஊடாக நேரலை யில் ஒளிபரப்பியுள்ளார்.

இதனை அவதானித்த ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் மாநகர சபை உறுப்பினர் ப.தர்சானந் குறித்த விடயம் தொடர்பில் மாநகர முதல் வரின் கவனத்திற்குக் கொண்டு சென் றார்.

சபை ஒழுங்கு விதிகளுக்கு மாறாக குறித்த உறுப்பினர் செயற்பட்டதால் அவருக்கு ஒரு மாதம் சபை அமர் வில் பங்கேற்கத் தடை விதிப்பது சம் பந்தமாக முதல்வர் சபை உறுப்பினர் களின் ஆலோசனையைக் கேட்டார்.

இதற்கு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர் இளங்கோவன் குறித்த நபர் புதிய உறுப்பினர் என்ப தால் மன்னிப்பு வழங்குமாறு கோரி னார். இதனையடுத்து ஏனைய கட்சி களைச் சேர்ந்த சிலர் குறித்த உறுப் பினரிடம் தன்னிலை விளக்கம் கோரு மாறு கோரினர்.

இதனையடுத்து சபைக்குள் வந்த குறித்த உறுப்பினர் தான் ஊடகவிய லாளர் எனக் கூறியதுடன் அடையாள அட்டை ஒன்றைக் காண்பித்து அத னால்தான் நேரலை செய்தேன் என் றார்.

ஊடகவியலாளர்கள் இருக்கும் போது உறுப்பினர் அவ்வாறு செயற் பட்டமை தொடர்பாகக் கடும் எச்ச ரிக்கை விடுத்த மாநகர முதல்வர் இனிமேல் இவ்வாறு சபை அமர்வில் நடந்தால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கை விடுத்தார். (ம-7,33)

## கழுத்தில் கத்தி...

முல்லைத்தீவு - முள்ளியவளை, பொன்னகர் கிராமத்தில் உள்ள வளர் மதி மைதானத்திற்கு அருகாமையில் நேற்று முன்தினம் இரவு 7 மணியள வில் வீதியால் பயணித்த பெண் ஒரு வரை இனந்தெரியாத கொள்ளையர் கள் இருவர் வழிமறித்து கழுத்தில் கத்தியினை வைத்து மிரட்டி கழுத்தில் அணிந்திருந்த நான்கரை பவுண் தங்கச் சங்கிலியை பறித்துக்கொண்டு தப்பிச் சென்றி ருந்தனர்.

குறித்த சம்ப வம் தொடர்பில் உடனடியாக குறித்த கிராம மக்களுக்கு தெரி யப்படுத்தப்பட் டதையடுத்து ஊர்மக்கள் இணைந்து கொள்ளையர்கள் இருவரையும் மடக்கிப் பிடித்து முள்ளியவளை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ள னர். (ம-7,104)

## வடக்...

ரமிக்கப்பட்டுள்ள காணிகளை விடு விக்குமாறு கோரி கொழும்பில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று ஜனாதி பதி செயலகத் திற்கு அண்மை யாக நேற்று முன் தினம் முன்னெ டுக்கப்பட்டிருந் தமை குறிப்பிடத் தக்கது. (ம-7)

## ரயில்...

கோவிலடி, திரு நெல்வேலியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான சுந் தரக் குருக்கள் ஞான சர்மா (வயது-54) என்ப வரே உயிரிழந்த வராவார்.

மேற்படி குடும் பஸ்தர் கமநல சேவைத் திணைக்களத் தில் கடமை புரி கின்றார். நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (15) யாழ். மாவட்ட செயலகத்தில் கடிதம் ஒன்றை வழங்கு வதற்காக மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது ஏ9 வீதியில் உள்ள புகையிரதக் கடவையை நண்பகல் 12 .40 மணியளவில் கடக்க முற்பட்டபோது கொழும்பிலிருந்து யாழ்.நோக்கி வந்த கடுகதிப் புகையிர தம் அவரை மோதித் தள்ளியுள்ளது.

இதில் படுகாயம் அடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனு மதித்த நிலையில் நேற்று முன்தினம் மாலை உயிரிழந்துள்ளார்.

இம்மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவா யம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2025.07.16
சீட்டிழுப்பு இலக்கம் 5892
L 5 6 9 5 4 1
அத சம்பத
L 9 5 4 1
சீட்டிழுப்பு இலக்கம் 0467
National Lotteries Board

சுப தவசக்
திகதி 2025.07.16
சீட்டிழுப்பு இலக்கம் 008
கடகம் 22 25 28 49

தன நிதானய
திகதி - 2025.07.16
சீட்டிழுப்பு இலக்கம் - 1922
V 03 04 51 53 V
Double Chance 77944

மெகா பவர்
திகதி 16/07/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2240
B 07 08 37 71 76

ஜய
திகதி 2025.07.16
சீட்டிழுப்பு இலக்கம் 0160
I 3 1 8 7

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4134
சீட்டிழுப்பு திகதி 16.07.2025
C 01 22 30 78
C

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.07.16
சீட்டிழுப்பு இலக்கம் 1201
கடகம் 19 23 50 57 கடகம்
04570 38

உத்தியோகபூர்வ முடிவுகள்
16.07.2025 வெற்றி வாரம் 0600
ஆங்கில எழுத்து V மற்றும் வெற்றி இலக்கம் 3 4 6 3 2 5
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,539,786.80
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2866
சீட்டிழுப்பு திகதி 2025.07.16 தினம் புதன்கிழமை
23 35 46 49 C
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,743,609.60

சனிதா
திகதி 16.07.2025 வெற்றி வாரம் 5027
02 39 46 70 P
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,677,673.20

ஜயோதா
திகதி 2025.07.16 வெற்றி வாரம் 2144
05 18 40 57 E
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 30,494,403.60

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4578
சீட்டிழுப்பு திகதி 16.07.2025 தினம் புதன்கிழமை
33 40 50 54 கடகம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,282,062.80

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
A 33 22 35 49 65
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.582,760,000.60
2042 16.07.2025 புதன்கிழமை

அத கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
வெற்றி வாரம் : 2692
சீட்டிழுப்பு திகதி : 2025.07.16
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.72,579,904.80
21 41 62 73 Q

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூதூர் படுகொலையின் 39ம் ஆண்டு நினைவேந்தல்



மூதூர் பெரியவெளி பாடசாலையில் அமைக்கப்பட்டிருந்த அகதி முகாமில் பாதுகாப்புத்தேடி தஞ்சம் புகுந்திருந்த பொதுமக்கள் 44 பேர் ஆயுததாரிகளினால் சுட்டும், வெட்டியும், எரித்தும் படுகொலை செய்யப்பட்ட பெரியவெளி அகதி முகாம் படுகொலையின் 39 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்றுப் புதன்கிழமை (16) உணர்வுபூர்வமாக இடம்பெற்றது.

படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவுகளினாலும், பொதுமக்களினாலும் உயிரிழந்தவர்களுக்கு மலர் தூவி விளக்கேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது, படுகொலைச் சம்பவம் இடம்பெற்று இன்றுடன் (நேற்று) 39 வருடங்கள் பூர்த்தியாகின்ற நிலையிலும் தமக்கான நீதி இதுவரை கிடைக்கப் பெறவில்லை எனவும் தற்போது இருக்கின்ற புதிய அரசின் ஆட்சியிலாவது தமக்கான நீதி கிடைக்கப் பெற வேண்டும் எனப் பாதிக்கப்பட்ட உறவுகள் கோரிக்கை விடுத்தனர். (ம-7)


## வைத்தியம்

கை விறைப்பு | கால் விறைப்பு | கை எரிவு | கால் எரிவு
குழந்தை இன்மை | நாட்பட்ட தலைவலி
மூலம் | கழுத்து வலி | கால் பாத விறைப்பு
முள்ளந்தண்டு வலி | முழங்கால், குதி வலி
Sciatica | Rheumatic Arthritis | நாட்பட்ட சளி |
இருதயவலி | தலைக்கு இரத்தம் போகாமை, வாதம்.
மிகச்சிறந்த மூலிகை, Acu சிகிச்சைகள்
நல்லூர், யாழ்ப்பாணம்.
Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)
தொடர்புகளுக்கு : 0777 301 669
(1332)


# 2026 வரவு செலவுத் திட்ட கலந்துரையாடல் ஆரம்பம்

2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பிப்பது தொடர்பான பூர்வாங்கத் வரவு செலவுத் திட்ட திட்டமிடல் மற்றும் அபிவிருத்திப் போக்குகள் தொடர்பாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் நிதி அமைச்சின் அதிகாரிகளுக்கு இடையிலான கலந்துரையாடல் நேற்று (16) பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்படி, எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பது தொடர்பான தற்போதைய நிலைமை குறித்து ஜனாதிபதி நிதியமைச்சின் அதிகாரிகளிடம் கேட்டறிந்ததுடன், வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளைக் கோருவதற்கான சுற்றறிக்கை தற்போது வெளியிடப்பட்டுள்ளதாகவும், அந்தந்த நிறுவனங்கள் தொடர்பான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளை உரிய செலவின வரம்பிற்குள் சமர்ப்பிப்பதற்கு இம்மாதம் 31ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும் நிதியமைச்சின் அதிகாரிகள் ஜனாதிபதியிடம் தெரிவித்தனர். (ம-7)

# அலிபேபிக்கு மரண தண்டனை

அலிபேபி என்றழைக்கப்படும் கொடித்துவக்கு ஆராச்சிலக் வசந்தா என்பவருக்கு, ஒருவரைக் கடத்தி கொலை செய்த குற்றச்சாட்டில் குற்றவாளியாக இனங்காணப்பட்டு மரண தண்டனை விதிக் கப்பட்டுள்ளது.

எம்பிலிப்பிட்டிய உயர் நீதிமன்ற நீதிபதி புத்திக எஸ். ராகல, இந்த உத்தரவை, நேற்றுப் பிறப்பித்தார்.

வெலிகெபொல ஹட்டங்கல பகுதியில் 2012 ஆம் ஆண்டு ஒருவரைக் கடத்தி கொலை செய்த குற்றச்சாட்டில் அவர் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டது. (ம-7)

# வயோதிபரொருவர் சடலமாக மீட்பு

மாத்தறை, மிதிகம தொடருந்து நிலையம் அருகே கழிவு நீர் வழிந்தோடும் கால்வாயிலிருந்து இனம் தெரியாத வயோதிபர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் சுமார் அறுபது வயது மதிக்கத்தக்கவர் எனவும் சடலத்தின் அருகே குறித்த நபரின் ஆடைகள் மற்றும் மருந்துப் பொருட்கள் அடங்கிய பையொன்றும் கண்டெடுக்கப்பட்டுள்ளது எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலத்தை மீட்ட பொலிஸார், பிரேத பரிசோதனைக்காக மாத்தறை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)


## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

17.07.2025



மலர்வு 01 . 02 . 1944

உதிர்வு 18 . 06 . 2025

சங்கானை ஆஸ்பத்திரி வீதியைப் பிறப்பிடமாகவும் இல.201, பிறவுண் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட எமது குடும்பத் தலைவி

### அமரர் தெய்வநாயகி மகேந்திரராசா

கண் முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
எம் முன்னே உங்கள் முகம் எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து நீங்கள் விண்ணோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாமல் கன காலம் இருப்பீர்கள் அம்மா!

எமது குடும்பத் தலைவியின் மறைவுச் செய்தி அறிந்து நேரில் வந்தும் தொலைபேசியூடாகவும் முகநூல், மின்னஞ்சல் மூலமாகவும் எமக்கு அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறியவர்களுக்கும் மலர் வளையங்கள், மலர் மாலை சாத்தியவர்களுக்கும் மற்றும் அனைத்து வழிகளிலும் ஆறுதலாகவும் உதவியாகவும் இருந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(C-3431)

இல.201, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

இங்ஙனம்:
குடும்பத்தினர்

## ஆங்கிலம், சிங்கள மொழி வகுப்புக்கள்

தரம் 1 தொடக்கம் O/L வகுப்பு மாணவர்களுக்கான ஆங்கிலம், சிங்களமொழி வகுப்புக்கள் பட்டதாரி ஆசிரியரால் உங்கள் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.

075 134 7080

(4823)

## கனடா - வரி இல்லாமல் விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3950/-
11-16 Kg 2690/-
21-27 Kg 2490/-

குறைந்த விலை - நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery

UK 11Kg - 1400/- | France 11Kg - 2200/- | Germany 11Kg - 2000/-
Swiss 11Kg - 2470/- | Australia 11Kg - 2130/- | Italy 11Kg - 2250/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237

## விற்பனையாளர் தேவை (பெண்)

எமது ஜவுளி நிறுவனத்துக்கு புடவை வியாபாரம் பழக ஆர்வம் உள்ளவர்களும் தொழில் பழகியவர்களும் தேவை
மதிய உணவுடன் கூடிய சம்பளம்

சிவகணேஸன் TEX
41 பெரியகடை வீதி
(4828)

## பெற்றோர், மாணவர்களின் தெரிவு...

A/L - 2027 புவியியல்
N.BABU (சனி, ஞாயிறு - 9 a.m)
- ஆரம்ப அலகில் இருந்து கற்பிக்கப்படும்.
- புதிய அனுமதி வழங்கப்படும்.

DMI ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்
077 936 5087
(4822)

## வாகனம் விற்பனைக்கு

LH 20 கயஸ் ரக வாகனம் விற்பனைக்கு.
61 - XXXX
யாழ்ப்பாணம்
(4825)
077 005 0344

## உடனடி வேலைவாய்ப்பு

அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திற்கு உத்தியோகத்தர்கள் தேவை. (A/L படித்தவர்கள் விரும்பத்தக்கது) 5 நபர்கள் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர்.
077 408 8241
(C-3433)

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS

எமது கிளைகள்: கிளிநொச்சி, சாவகச்சேரி, நெல்லியடி, திருகோணமலை, கோப்பாய், பண்டத்தரிப்பு, கொழும்பு, சுன்னாகம், மானிப்பாய், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, புத்தூர், சங்கானை

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-3432)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.07.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org